ஜனவிநோதினி.

இல. 12.] டிசெம்பர்மீ 1876. [புஸ்த. VII.

மகாராணியாரவர்களின் அருமைமகள்.

மகிமைபொருந்திய நமது விக்டோரியா மகாராணியார்க்குக் கடைசியாய்ப் பிறந்த செல்வப்புதல்வி அந்த ராஜவம்சத்திற்கு அருமையான ஒரு சிறுகுழந்தையென்றும், அதனால் ராஜ்யத்திற்கெல்லாம் அருமந்தக்குழந்தையென்றும் ஜனங்கள் நினைத்திருக்கிறார்கள். இந்தச் சஞ்சிகையோடு நாம் சேர்த்தனுப்பியிருக்கிற அந்த ராஜபுத்திரியின் உருவப்படத்தைப் பார்ப்பவர்கள், "இப்போது தான் இந்த ராஜகுமார்த்தி அவதரித்தாளென்று கேள்வியுற்றோம், அதற்குள் இவ்வளவு வயதாய்விட்டதா? காலசக்கரத்தின் ஓட்டத்தை நாம் என்னவென்று வர்ணிக்கலாம்!" என்று வியக்கத்தக்கதாயிருக்கும்.

மாட்சிமைப்பொருந்திய பியாத்ரிஸ் சீமாட்டி சென்ற 1857-ஆ. ஏப்ரில்மீ 14உ விக்டோரியா மகாராணியார்க்குச் செல்வப்பெண்ணாகப் பிறந்தாள். இப்போது அந்தக் குமார்த்திக்குச் சுமார் 20 வயதாகிறது. அவள் பிறந்த நான்காம்வருஷத்திலேயே மேன்மைபெற்றிருந்த தன் தகப்பனைப் பறிகொடுத்தாள். அது ராஜ்யத்திற்கெல்லாம் மிகவும் விசனகரமான தருணம். அந்தத் தருணத்தில் இந்தச் சீமாட்டிக்குத் தன் தந்தை இறந்ததனாலுண்டான ஆபத்தைச் சற்றுங் கண்டறியக்கூடாத இளமைப்பருவமாயிருந்தது. தமது பர்த்தா பரலோகஞ்சென்றுபோகவே மகாராணியாரும் தனியாய்நின்று சோகிக்கும்படி நேரிட்டது. அக்காலங்களில் அவர்க்கு இந்தக் குழந்தைதவிர வேறு போதுபோக்கில்லை. இப்போதிருக்கிற பியாத்ரிஸ் சீமாட்டியின் நடக்கைகளைப்பார்த்தால், அந்த ராஜவமிசத்திற்கும் குடித்தனத்திற்கும் கடைசியான அருமைமகளென்று அனைவரும் விசேஷமாய் அன்புபாராட்டும்படி, அந்தந்தப் பருவத்திற்கு ஏற்க உன்னத ஸ்திதிக்குவந்து, மேன்மைபெற்று வாழ்வாளென்று நினைக்கத்தக்கதாயிருக்கிறது.

சாதாரணமாய் ராஜவம்சத்திலுதிக்கிறவர்கள் வேலைகளொன்றுமில்லாமல் உல்லாசமாய் உலாத்தித் திரிவார்களென்று நினைப்பது

உலகவழக்கம்; இப்போது நாம் விசாரித்துப்பார்க்குமளவில் அப்படியில்லை. நமது ராஜபுத்திரர்களும் ராஜபுத்திரிகளும் ஜனங்களுக்கு உபகாரமாயும் விநோதமாயுமிருக்கிற காரியங்களிலேயே பாடுபட்டுவருகிறார்களென்று தெரியவருகிறது. தருமசாலைகள், சபாமண்டபங்கள், சிற்பசாலைகள், தேவாலயங்கள், புதுப்பாதைகள் பாலங்கள் முதலான கட்டடங்களுக்கு அஸ்திவாரம்போடுவதும், விருந்து மகோற்சவமுதலான காரியங்களை நடத்துவதும், வைத்தியசாலை, தருமசத்திரங்கள் முதலியவிடங்களில் தருமகாரியங்களைச் செம்மையாய்ப் பரிபாலிப்பதுமான ஜநோபகார வியாபாரங்களிலேயே அவர்கள் கண்ணாயிருக்கிறார்கள். பக்கத்துப் படத்தில் காட்டியிருக்கும் அருமைச்சீமாட்டியும் சீக்கிரத்தில் மகாராணியாருடைய ஒற்றைக்குடைக்கீழ் வாழ்ந்துகொண்டிருக்கிற குடிகளுக்கு உபகாரமான காரியங்களில் முன்வந்துநிற்கக் காணலாம்.

சரீரநோயால் மனநோயுண்டாகும்.

சாதாரணமாய்ப் பிள்ளைகள் காலையிலெழுந்து வீட்டுக்கு வெளியிலுள்ள நல்லகாற்றை உட்கொண்டு பாடசாலைக்குப் போனால் அவர்களுக்குப் பாடம்படிக்க வெகு உற்சாகமாயிருக்கும். அப்படியே ராத்திரி நன்றாய் அயர்ந்து நித்திரைசெய்து காலைப்போஜனமும் நன்றாய்ப் புசித்தால் பள்ளிக்கூடத்திற்குப் போகப் பிள்ளைகளுக்கு மிகவும் சந்தோஷகரமாகும். ராத்திரியும் செம்மையாய்த் தூங்காமல் காலையிலும் சாப்பாடு இல்லாமற் போனால் ஒருவேலையிலும் உற்சாகம் இருக்கிறதில்லை. இவைகளைப்பார்த்தால் தேஹத்திற்கு நன்மைசெய்கின்றவை எவையோ அவைதாம் நினைப்புக்கு ஏதுவான உறுப்புகளுக்கும் நன்மைசெய்கின்றனவென்று தெரியவருகிறது.

நினைப்புக்கு ஏதுவான இந்திரியமானது அதிமெதுவான வெளுத்த ஒருவகை வஸ்துவோடு ஏதோ ஒருவகையாய்ச் சம்பந்தப்பட்டிருக்கின்றது. அந்தச் சம்பந்தம் இப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியாது. அந்த வஸ்துவை அதற்குத்தக்கதான ஒரு மூடி யாதொரு தீங்கும் நேராதபடி கவர்ந்துகொண்டிருக்கின்றது; அந்த மெதுவான பொருள்தான் மூளை. அதைக் கவர்ந்துகொண்டிருப்பது கபாலம். எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானமென்று நன்றாய் விளங்குவதற்குத்தான் இந்தப்பொருள் நமது சரீரத்தில் உயர்ந்தவிடமான சிரஸில் அமைக்கப்பட்டிருப்பது போலிருக்கிறது. அதை நாம் சீராய் உபயோகித்தால் நமக்கு

எதுவும் ஈடில்லையென்று சொல்லும்படி சிறந்த கருத்துகளை உண்டாக்கத்தக்க திறமையுண்டாகும். அப்படியின்றி அநீதமாய் உபயோகித்தால் மடத்தனமும் புத்திக்கேடுமுண்டாகும்.

மூளையும் அதைச்சார்ந்த நரம்பின் பாகமும்.



b a. மூளை.
b. மூளையினின்று முதுகு எலும்பில் ஓடும் பிரதான நரம்பு.

மூளை நாம் நினைப்பதற்கு ஏதுவாயிருக்கிறதென்பதுமாத்திரமேயல்ல, நமது உணர்ச்சிக்கும் அது காரணந்தான். மூளை மங்தப்பட்டுப்போமாகில் தேஹத்தில் உணர்ச்சி இராது. அறுத்தல் குத்தல் முதலியன வைத்தியங்கள் செய்யும்போது மூளையடங்கிக் கிடக்குமாயின் அவைகளாலுண்டாகிற நோவு எள்ளளவும் நமக்குத் தெரியாது.

நமது தேஹத்தின் அந்தந்த அவயவங்களிலும் உணர்ச்சியும் அசைவும் உண்டாகும்படி நரம்புகள் மூளைக்கும் அந்தந்த அவயவங்களுக்கும் நடுவே தந்திகள்போலக் கட்டப்பட்டிருக்கின்றன. அவை மின்தபாலிலுள்ள கம்பிகள்போல மூளையின் செய்தியை அந்தந்த உறுப்புகளுக்குத் தெரிவிக்கவும், உறுப்புகளில் நடக்கிற செய்திகளை மூளைக்குத் தெரிவிக்கவும் ஏதுவாயிருக்கின்றன.

நாம் கையை அசைக்கவேண்டுமென்று நினைத்தால் அந்தச் செய்தியை மூளை நாடிகளின் மூலமாய் கைக்குத் தெரிவிக்கின்றது. பிறகு அந்தக் கட்டளைப்படியே கையசைகின்றது. நடுவே கம்பியறுந்துபோனால் மின்தபால் செய்தியை எப்படி அப்புறம்போகச் செய்யாதோ, அப்படியே நரம்புகள் நடுவே துண்டாய்ப்போனால் மூளை தான் கருதியபடி கையை அசைக்கமாட்டாது.

தேஹத்தில் எங்கேயாவது கொஞ்சம் காயம்பட்டால் அந்த உறுப்பிலிருக்கிற நரம்பு அந்தச் செய்தியை உடனே மூளையில் அண்டவிடுகிறது. அதன்பிறகுதான் அந்தவிடத்தில் நோவென்று நமக்குத் தெரியும். அந்த அவயவத்திற்கும் மூளைக்கும் இருக்கிற நரம்பு நடுவே அறுந்துபோனால் நமக்கு நோவே தெரியாது. சிலர் திமிர்

வாதம் பிடித்து உறுப்புகளில் உணர்ச்சியே இல்லாமலிருக்கக்கண்டுங் கேட்டுமிருக்கிறோமே; அவயவங்களோ அல்லது மூளையோ ஒன்றுக்கொன்று நரம்பின்வழியாய் சங்கதிகளைத் தெரிவிக்கக்கூடாமல் பலவீனப்பட்டு நோய்பிடித்துப்போவதினாலேதான் அப்படியாகிறது.

இந்த நரம்புகளுக்கெல்லாம் மூலமான நரம்பு முதுகெலும்புக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேலே காட்டியிருக்கிற படத்தைப் பாருங்கள். அது மூளையினின்றும் வருகிறது. முதுகெலும்பிலிருக்கிற சிறிய துவாரங்களின் மூலமாய் அது அநேகஞ் சிறு நரம்புகளாகக் கிளைக்கின்றது. எந்த உறுப்புக்கு அதிகமாய் உணர்ச்சியும் அசைவும் தேவையோ அங்கே நரம்புகள் அதிகமாய்க் கூடியிருக்கக்காணலாம்.

விஷயங்களை மனது ஆராய்வதற்கு மூளை செய்கிற உதவி இவ்வகையென்று நமக்குத் தெரியவில்லையாயினும் மூளை செம்மையாயிராவிட்டால் ஆலோசிக்கிற சக்தி குறைந்துபோகிறதென்பதுமாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரிகிறது. அப்படியே சரீரத்தைச் சுகமாய்ப் போஷிக்கின்ற தேஹப்பயிற்சி, ஓய்வு, சுத்தமான ரத்தம் சரீரத்தில் பாவுதல், முதலியவைதாம் மூளையையும் செம்மைப்படுத்தி நன்றாய் உபயோகமாம்படி செய்கின்றனவென்பதுந்தெரிகிறது.

கூட்டங்கூடிய இடங்களிலாவது ஒடுக்கமான அறைகளிலாவது இருந்து நாம் கெட்டகாற்றை உட்கொண்டால், அதனால் உண்டாகும் தீமையுடனே நமது மூளையில் தெரிகிறது. தலைவலி உண்டாகி புத்தி மந்திக்க தலைப்படுகின்றது. அதன்பிறகு ஒன்றை நினைப்பதென்றால் தலைச்சுமையாய்த் தோன்றும். அந்தக் காற்று முழுதுங் கெட்டுப்போயிருக்குமாயின், ஆயாசம் களைமுதலியவையுண்டாகும். அதன்பிறகு நினைக்கிறசக்தி முழுதும் அற்றுப்போம். இவ்வாறு அநேகர் சபைகளுக்கும் கூட்டங்களுக்கும் போய் நல்லகாற்றில்லாமையால் களைத்து மதிமயங்கி, மறுபடி வெளியே கொண்டுவிட்டபிறகு நல்லகாற்றை உட்கொண்டு கொஞ்சநேரங்கழித்து மூர்ச்சைதெளிந்தார்களென்று அநேகமாய்க் கேள்விகளுண்டு.

கெட்டகாற்றுள்ள இடத்திலேயே எப்போதும் வாசஞ்செய்து கொண்டு இருப்பவர்களுக்கு, மூளையில் ஒருபோதும் சுத்தமான ரத்தம் வந்துசேராமல் பலவீனப்பட்டுத் தீராநோய்களெல்லாம் உண்டாகும், நரம்புகளில் வலியுண்டாகும். மதிமயங்கிப்போம். ஒருவகைக் கெட்ட தலைநோயுண்டாம். பிறகு அவைகளைப் போக்குவது வருத்தம்.

மூளைக்குச் செல்லுகிற ரத்தத்தில் வேண்டுமளவு சாரம் இல்லாவிட்டாலும், வேண்டுமளவு உணவில்லாவிட்டாலும் இத்தன்மையான நரம்பைப்பற்றிய நோய்களுண்டாகும். உட்கொண்ட உணவு ஜீரணமாகாவிட்டாலும் உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உட்

கொண்டாலும் மதிமயக்கமுதலிய கெடுதிகள் உண்டாகும். ஏனெனில் அதனால் செம்மையான அன்னரஸம் உண்டாவதில்லை. அதில்லாமற்போனால் அதனாலுண்டாகும் ரத்தம் செம்மையாய் மூளையிற்பரவி புத்தியை நன்றாய் விகஸிப்பிக்கிறதில்லை.

வன்கடுப்பும் வெறு வேதனையுமுள்ள சுடுமூஞ்சி மனிதன் ஒருவன் ஒரு குடும்பத்திலிருந்தால் அதனால் அந்தக் குடும்பமெல்லாம் அடக்கமில்லாமல் சீர்குலைந்து எப்போதும் சச்சரவுள்ளதாய் விடுமென்றால், நமது மூளையும் அவ்வாறு கெடாமல் சுகமாயிருக்கும்படி நாம் எவ்வளவு முயலவேண்டுமோ அதை ஒருவர் நமக்குச் சொல்லவேண்டுமோ? ஒருவனுடைய கெட்டகுணம் தொத்துநோய்போல் அவனிருக்கிற வீடுமுழுதும் எப்படி பாவிப்போகின்றது! இதோ அதற்குத் திருஷ்டாந்தம் கேளுங்கள். ஒரு வீட்டில் நரம்புகள் பலவீனப்பட்ட தலைமகளொருத்தியிருந்தால், அவளுக்குத் தன் மக்கள் வீட்டில் உபத்திரவம்செய்வதைப் பொறுக்கக்கூடுகிறதில்லை. அந்தப் பிள்ளைகளைப் பொறுமையாய்ச் சமாதானப்படுத்தி நல்லவழியாய் அடக்குவதைவிட்டு அடிக்கவும் திட்டவும் தலைப்படுகிறாள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த பிள்ளைகளும் தங்கள் தாய் செய்வதுபோலவே ஒருவரோடு ஒருவர் அடிதடிசெய்ய ஆரம்பிக்கிறார்கள். அப்படி சிறுபிராயந்தொடங்கி ஒருவரையொருவர் நேசிப்பதென்பதே வழக்கத்தில்வாராமல் பகைப்பதே பிரதானமாய்ப் பழகிப்போகின்றமையால் வரவர அந்தப் பிள்ளைகள் மிகவும் கெட்டவர்களாய்விடுகிறார்கள்.

குடியன் ஒருவன் வீட்டுக்குத் தலைவனாயிருந்தால் அவன் குடியினால் மூளை பலவீனப்பட்டுத் தன் புத்தி தனக்குத் தெரியாமல் தன பெண்டுபிள்ளைகளை வாயில்வந்தபடி திட்டத் தலைப்படுகிறான். அவன் எப்போதும் ஓய்வில்லாமல் திட்டுவதை வீட்டுக்காரி பொறுக்கமாட்டாமல் அவளும் எதிரே பிதற்றுகிறாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளைகளும் அப்படியே தாங்களும் நடக்கிறார்கள். கடைசியில் அந்தவீடு அடங்கி அமைதியாய் இருப்பதைவிட்டு எப்போதும் சண்டையும் சச்சரவும் இரைச்சலுமுள்ளதாய்விடுகிறது.

புத்தியின்மையும் கெட்டகுணமும் அசவுக்கியத்தாலேதான் உண்டாகின்றனவென்பதில்லை. சிலர் பிறப்பிலேயே அத்தன்மையராய்ப் பிறக்கிறார்கள்.

தேஹத்தின் மற்றப் பாகங்களைப்போல் மூளைக்கும் பயிற்சி அவசியமானது. நமது கைகால்களை நாம் செம்மையாய் உபயோகிக்காவிட்டால் அவை உறுதியாய்ச் செம்மையாக வளராதல்லவா? அதுபோலவே, மூளைக்கும் சரியான வேலைகொடாவிட்டால் அதுவும் செம்மையாய் வளராது.

நாம் பாடசாலைக்குப் போவது படிப்பதற்குமாத்திரமே பயன் படுவதன்று. நமது வாழ்நாள் முழுதும் நாம் செய்யவேண்டிய நல்ல காரியங்களெவையோ, அவைகளைச் செய்து முடிக்க வேண்டிய நல்ல வழிகளெவையோ அவையெல்லாம் நமக்கு நன்ருய்த் தெரியும்படி நமது மூளையைச் செம்மையாய்ப் பயிற்சி செய்வதற்கும் மிக்க உபயோகமானது. ஒருபோதும் ஒன்றையும் சிந்தியாமல் மனதைப் பிறந்தவடிவமாயே வைத்துக்கொண்டிருப்பவன் ஒருபோதும் நல்லவழிக்கு வரமாட்டான். அப்படிப் பட்டவனை வடமொழியார் 'யதாஜாதன்' (பிறந்தபடியிருப்பவன்) என்பார்கள்.

ஆதிமுதல் தங்கள் புத்தியைக் கூர்மையாக்கிக்கொண்டுவருகிறவர்கள் ஒருபோதும் கெட்டுப்போவதில்லை. ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள். சாதாரணமாய்ப் பயித்தியக்கார மடத்திற்கு வந்து சேருகிற பித்தர்கள் அநேகமாய், படிக்கப் பாடசாலையில்லாமல் அடிநாளில் தங்கள் காலங்களை வீண்கழித்துப் பின்பு ஒன்றுஞ் செய்யத் தோன்ருமல் முற்றிப்போன நாட்டுப்புறத்து மனிதர்களாயேயிருக்கிருர்கள். சிறந்தவிடங்களிலிருக்கிற மனிதர்களை அங்கே காண்பதரிது. அவர்கள் விசேஷமாய்ப் படித்து புத்தியை நன்ருய்க் கூர்மைசெய்து எப்போதும் தேகமும் மனதும் உழைக்கும்படி பயின்றிருக்கிருர்கள். நாம் செய்யவேண்டிய எல்லாக் காரியத்திலும் நன்ருய் நமது புத்தியைச் செலுத்தி ஆலோசிப்பது தான் மூளையின் பயிற்சியாம்.

தமக்கு வேண்டியவைகளைப் படிக்கவும், நல்லமாதிரிகளை அப்பியாசஞ் செய்துகொள்ளவும் இளமைப்பருவந்தான் தக்கதருணம். ஏதாவது ஒரு வர்த்தகத்தொழிலில் பிரவேசிக்கவேண்டுமென்று கருத்துடையவர்கள், தங்கள் உறுப்புகளெல்லாம் முதிர்ந்துபோகாமல் இளமையாயிருக்கிற காலத்திலேயே வேண்டிய வேலைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். "செடியாய் வணங்காதது மரமாய் வணங்குமா?'' அப்படி பழக்கிக்கொள்ளாமல் முதிர்ந்துபோவார்களாளுல் பிறகு உடம்புவணங்கி வேலைசெய்வது தலைச்சுமையாயிருக்கும்.

மூளையின் குணமும் அப்படிப்பட்டதுதான். அது கொஞ்சகாலம்வரையில்தான் வளர்ந்துகொண்டிருக்கும். பிறகு ஒரே நிலையில் நின்றுபோம். அப்புறம் அது நமக்குச் சொன்னபடி கேளாது.

நாம் வாலிபத்தில் மூளையை எவ்வளவு நன்ருய்ப் பயிற்சிசெய்விக்கிருேமோ, அவ்வளவுதான் அது நமக்குப் பிற்காலத்திலும் உபயோகப்படும். இளமையில் நாம் எதையும் சுலபமாயும் சீக்கிரமாயும் கற்கக்கூடும். மூளை ஒரு நிலையில் நின்று உறுதிப் பட்டுப்போளுல் முடியாது. அப்படிப்பட்ட நல்லபருவத்தையெல்லாம் ஒரு வேலையுமின்றி வீண்போக்கிவிட்டால் பிற்காலத்

தில் பலவித சங்கடங்களும் வந்து வருத்தும்போது அவைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டிய வழிதெரியாமல் வருத்தப்படுவோம்.

பிள்ளைகளாகட்டும், பெண்களாகட்டும், தங்களுக்குப் பிற்காலத்தில் அறிவும் ஆலோசனையும் இல்லாவிட்டால் மிகவும் சங்கடநேருமென்றுமாத்திரம் முன்னதாய் அறிந்திருப்பார்களானால் காலத்தை வீண்போக்காமல் பிற்காலத்திற்கு உபயோகமான வழிகளில் மனதைப் பயிற்றுவதிலேயே கண்ணாயிருப்பார்கள்.

மூளைக்கு உழைப்பு எப்படி அவசியமோ அப்படியே ஓய்வும் அவசியமானதென்று சிறுபிள்ளைகளுக்கு நாம் சொல்லவேண்டுவதில்லை. ஏனெனில் அவர்கள் கடினமாய்ப் பிரயாசையெடுத்துக்கொண்டு வருந்திப்படிப்பது எப்போவோ அருமையாயிருக்கும். மனதுக்கு ஓய்வுகொடுக்கும்படி ராத்திரிகாலங்களில் விசேஷமாய் நித்திரைசெய்வதில் அவர்களுக்கு ஆசை அதிகமல்லவா? அப்படியே பகற்பொழுதிலும் மூளை வேலைசெய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டிய காலமுண்டு. வயிறுநிரம்பப் புசித்தவுடன் மூளையை அதிகமாய் வருத்தக்கூடாது.

மூளை இரைப்பை இரண்டும் ஒரேகாலத்தில் வலிந்து வேலைசெய்யக்கூடாது. அப்படியானால் அவைகளுக்குச் சேதமுண்டாகும். இரைப்பை இரையை ஜரிப்பிக்கிறவேலையில் பொறுப்பாயிருக்கிறகாலத்தில் மூளையும் ஆலோசிக்கிறவேலையில் பொறுப்பாயிருக்கக்கூடாது. ஏனெனில், தேஹத்தில் ஏதாவது ஒரு உறுப்பு அவசியமாய் ஒரு வேலைசெய்யவேண்டியிருந்தால், அதற்கு வேண்டிய நரம்புகளின் வலிமையை மூளை அவ்விடத்திற்குப் போம்படிசெய்கிறது. அந்த வேலைசெய்வதற்குப் போதுமான பலமுண்டாகும்படி அளவுக்கு அதிகமான ரத்தமும் அவ்விடத்திற்குப் போய்ச்சேரும்.

ஆஹாரம் ஜீரணமாகவேண்டுமானால் மூளையிலிருந்து அதிகமாய் நரம்புகளின் முயற்சி இரைப்பைக்குள் வந்துசேருகின்றது. ஜீரணமாவதற்கு வேண்டுமான சூடும் சுருசுருப்புமுண்டாகும்படி அந்த நரம்புகளின் வழியாய் அபரிமிதமான ரத்தம் ஜீரணமாகிறவரையில் அவ்விடத்திற்கு வந்துகொண்டிருக்கும். அதனால் ஜீரணமாகிறகாலத்தில் மூளையிலும் மற்றப்பாகங்களிலும் நரம்புகளின் முயற்சி குறைந்திருக்கும். நாம் வயிறுநிரம்பப் புசித்தவுடன் தேஹத்தில் குளிர்ச்சியும் மந்தமுமுண்டாகின்றனவே; நரம்புகளின் முயற்சியும் ரத்தமும் மூளையிலிருந்து அதிகமாய் இரைப்பைக்குப் போய்விடுவதனாலேதான் அப்படியாகின்றது.

இரைப்பைபோலவே மூளையும் கடினமாய் நினைக்கிறவேலையில் இருக்குமானால் ரத்தமெல்லாம் இரைப்பையை விட்டுவிட்டு மூளைக்குப்போய்ச் சேருகின்றது. அதனால் ஜீரணமாவது நின்றுபோய் இரைப்பையும் அதைச்சேர்ந்த உறுப்புகளும் கெட்டுப்போகின்றன.

நாம் புசித்துக்கொண்டிருக்கிற காலங்களில் ஏதாவது கெட்ட ஸமாசாரங்களாவது அல்லது நமது மூளையைத் தூண்டிவிடத்தக்க வேறெந்தச் செய்தியாவது நமக்குக் கேள்வியானால் உடனே நமது பசி மந்தித்து ஜீரணசக்தி அடங்கிப்போவது நமக்குத் தெரிந்திருக்கிறதல்லவா? அது பாதி நரம்பு சம்பந்தத்தாலும் பாதி ரத்தமெல்லாம் திடீரென்று இரைப்பையைவிட்டு மூளையில் போய்விடுவதாலும் உண்டாகின்றது. அப்படியே பூர்த்தியாய்ப் புசித்தபின்பு வேகமாய் நடந்தாலும், கடினமாய் வேலைசெய்தாலும், வருந்திப்படித்தாலும் அநேகமாய் அஜீரணமுண்டாகும். ஆகையால் பகற்பொழுதிலும் போஜனமானபின்பு கொஞ்சநேரம் சும்மாவிருப்பதே நலம்.

அக்பர் சமஸ்தானத்தின் சிறப்பு.

(தொடர்ச்சி.)

அவர்காலத்தில் பாரசீகதேசத்திற் பிறந்த பெயர்பெற்ற சாஸ்திரியார் ஒருவர் இருந்தார். அவரை ஒருநாள் அழைப்பித்து மகமதியசமயத்தில் உள்ள பற்பல பிரிவுகளில் எது உத்தமமானது என்று வினவினார். ஓர் அரசர் சிம்மாசனத்திலுட்கார்ந்துகொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவ்வரசரிடத்துக்குப் போவதற்குப் பலவழிகள் உண்டு. எந்தவழியால் போனாலும் அரசரைப்பார்க்கலாம். நாம் அரசரைக் காணவேண்டியதேதவிர வழியிலிருப்பவரிடத்தில் நமக்கு வேலையில்லையென்று சாஸ்திரியார் பிரதிஉத்தரம் சொன்னார். அதாவது, எந்த மதத்தான் வாசல்காத்திருந்தபோதிலும் எந்தவழியேபோனாலும் கடவுளுடைய சன்னிதானத்துக்குக் கொண்டுபோய்விடும் என்பது கருத்து.

அக்பர்பாதுஷா காலத்தில் மகமதியசமயம் அதிகமாய்ப் பரவவில்லை. காசிநகரத்தில் அந்தப் பேச்சே கிடையாது. அவருடைய குடிகளில் மிகுதியானவர் இந்துக்கள். மகமதிய சமயமென்னும் பிரசண்டமாருதத்தின்முன் இந்துசமயமென்னும் புல்வளைந்த தரையில் படுத்தபோதிலும் காற்று ஓய்ந்தபிற்பாடு மறுபடியும் புல் தலையெடுக்கும். இந்துக்கள் தங்களுடைய சமயத்தைப் பரவச்செய்ய விருப்பம்கொண்டவர்களல்ல. புறச்சமயங்களை விரோதிக்கிறதுமில்லை.

பேபர் அரசருக்குமுன் அரசாண்டவர்கள் இந்துமதத்தை ஓங்கவிடவில்லை. அவர்கள் நாளில் மகமதிய சமயத்தை எத்திக்கிலும் பரவச்செய்தார்கள். அக்பர்பாதுஷாவின் காலத்திலோவெனில் இந்துசமயத்துக்கு யாதொரு குறைவுமில்லை. மகமதிய மதத்தைப்போலவே அதுவும் விருத்தியாயிற்று. கோவில்களுக்குப் போடப்பட்ட வரி அவரால் எடுத்துப் போடப்பட்டது. புண்ணியயாத்திரை செய்கிறவர்களுக்கு உண்டான இடுக்கணும் நீங்கிப்போயிற்று. இதனால் குருக்கள்மாருக்கும் குடிக

ளுக்கும் சௌக்கியமும் சந்தோஷமும் உண்டாயிற்று. இந்துசமயமும் யாதொரு தடையுமின்றி எங்கும் பரவி வளர்ந்தோங்கிற்று.

இவ்விதமான ஏற்பாடுகளெல்லாம் அக்பர்பாதுஷாவினுடைய சமஸ்தானத்திலிருந்த மகமதிய பிரபுக்களுக்குச் சம்மதமில்லை. அக்பருடைய குமாரராகிய ஜிஹாங்கிர் என்பவர் இந்துக்களுடைய கோவில்களை இடித்து அவர்களை மகமதியசமயத்தில் சேரும்படி நிர்ப்பந்தப்படுத்தவேண்டுமென்று விருப்பங்கொண்டார். அதைக்கண்டு அவருக்கு அடியில் வரைந்திருக்கிற கடிதத்தைப் பிதாவானவர் எழுதியனுப்பினார்.

"என் பிரியமான குழந்தையே.—நான் ஏகசக்கராதிபதியாயிருக்கிறேன். பூமியில் நான் கடவுளுடைய சாயலாகத் தோன்றுகிறேன். அவரால் படைக்கப்பட்ட ஜனங்களுக்கெல்லாம் யாதொரு பேதமின்றி அவர் அருள்புரிகிறார். என்னுடைய விசாரணையில் அடங்கிய ஜனங்கள்மீது தயையில்லாமல் அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவேனானால் நான் இருக்கிற உயர்ந்தபதவிக்குத் தக்கபடி நடந்தவனாகமாட்டேன். கடவுளால் படைக்கப்பட்ட எல்லா ஜனங்களிடத்திலும் நான் சமாதானமாக வாழ்கிறேன். அப்படியிருக்க, நான் ஏன் அவர்களுடைய பிரியத்தைக் கெடுத்துக்கொள்ளவேண்டும்? என்னுடைய குடிகளில் ஆறில் ஐந்துபாகம் இந்துக்களல்லவா? நீ தெரிவித்தமாதிரியாக நான் நடப்பதாயிருந்தால் அவர்களெல்லாரையும் கொலைசெய்யவேண்டுமல்லவா? ஆகையால் அவரவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளும்படி உத்தரவுசெய்திருக்கிறேன். அதுவுமன்றி, அந்த ஜனங்களெல்லாம் ஆக்கிரா நகரத்திலுள்ளவர்களைப்போல் சாஸ்திரவிசாரணைசெய்தும், கலைகளைக் கற்றும் குடிகளுக்குச் சௌக்கியத்தை உண்டாக்குகிறார்கள். அவர்களில் அநேகம்பேர் ராஜாங்கத்தில் உயர்ந்தபதவியடைந்திருக்கிறார்கள். இந்த நகரத்தில் எத்தேசத்து மனுஷரையும் எந்தசமயத்தை அனுசரிப்பவர்களையும் காணலாம்.

ஆக்கிராவிலும் லாகூரிலும் ஒரு வகுப்பான கிறிஸ்தவர்கள் கோயில் கட்டிக்கொள்ளும்படி உத்தரவுகொடுத்தார். பாடசாலைகள் ஏற்படுத்தும்படிக்கு இடம்கொடுத்ததன்றி, அவற்றிற்கு வரும்படிக்கும் ஏற்பாடுசெய்தார். குடிகள் அவரவருக்கு இஷ்டமான சமயத்தை அனுசரிக்கலாமென்று உத்தரவுசெய்ததன்றி, இந்துக்களும் மகமதியரும் கிறிஸ்தவர்களும் செய்யும் சமயவாதங்களைச் சந்தோஷமாகக் கேட்பார். மேற்சொன்ன சமயத்தார்கள் அவர் முன்னிலையில் வந்து வாதம்செய்வது வழக்கம். ஒவ்வொரு சமயத்தாரும் புறச்சமயத்தாரை இகழ்ந்து தம்மைப் புகழ்ந்துகொள்வதைப்பார்த்து நகைப்பார்.

ஒரு சமயத்தில் கோலாபட்டணத்திலிருந்து மூன்று கிறிஸ்தவர்கள் மகமதியரோடு சமயவாதம் செய்யவேண்டுமென்ற கருத்தோடு வந்தார்கள். பாதுஷாவானவர் சந்தோஷமடைந்து மகமதிய குருக்கள்மார்களையும் கிறிஸ்தவர்களையும் மிருகங்களை சண்டைவிடுவதுபோலச் சேர்த்துவிட்டுவிட்டார். மகமதியர் ஒருவர் தமது வேதத்தில் நம்பிக்கைவைத்து எரிந்துகொண்டிருக்கிற நெருப்பின்மேல் நடக்கிறதாகச் சொன்னார். கிறிஸ்தவர்களுக்கு அவ்விதமான நம்பிக்கை அவர்களுடைய வேதத்தில் இருக்குமானால் அவர்களுள் ஒருவர் அவ்வாறே செய்யவேண்டுமென்று அவர்களுக்கு பாதுஷா சொன்னார். கிறிஸ்தவர்கள் இதைக்கேட்டு முதலில் திடுக்கிட்டுத்

தங்களால் அப்படிச் செய்ய முடியாதென்று உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். இதுகண்டு மகமதியர் கிறிஸ்தவர்களை இகழத் தலைப்பட்டார்கள். பின்பு தைரியமடைந்து தாமும் மகமதியரும் நெருப்பின்மேல் குதித்தோடுவதற்குப் பதிலாக மெள்ள இருவரும் கைகோத்து நடந்துபோகிறதாயிருந்தால் தங்களுக்குச் சம்மதந்தானென்று கிறிஸ்தவர்கள் சொன்னார்கள். இவ்வாறு சொல்லவே மகமதியருக்கு முன்னிருந்த தைரியம் பறந்துபோய்விட்டது. நெருப்பில் இறங்குவதற்கு ஒருவரும் துணியவில்லை. கிறிஸ்தவர்களை அடக்க வேறொன்றும் தெரியாதவர்களாகி வாயில்வந்தபடி வைதார்கள். அது நியாயமல்லவென்று பாதுஷா உத்தரவுசெய்தார்.

இந்துக்கள் அவர்களுடைய விருப்பப்படி கடவுளை வணங்கலாமென்று உத்தரவு செய்திருந்தபோதிலும், அவர்களுடைய சில ஆசாரங்களைப் பாதுஷா விரும்பவில்லை. மன ஒப்பமில்லாமல் உடன்கட்டையேறக்கூடாதென்று கண்டிப்பாக உத்தரவுசெய்தார். ஒருநாள் இந்த அரசர் ஒருவர் தமது மருமகளை உடன்கட்டை ஏறும்படி பலவந்தம்செய்யப் போவதாகக் கேட்டு அதைத் தடுக்கும்பொருட்டு நெடுந்தூரம்போனார். மனுசொல்கிறதாவது: "நெடுநாள்வழக்கத்தை மாற்றக்கூடாது. அது வேதத்திலும் சாஸ்திரத்திலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆதலால் மனசாக்ஷிக்கு விரோதமாக நடவாத முதல்மூன்று வருணத்தாரும் பழையவழக்கத்தைக் கைவிடக்கூடாது." உடன்கட்டையேறுவதும் நெடுநாள்வழக்கந்தான். வேதசாஸ்திரங்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கத்தை நிறுத்த வேண்டுமானால் பலவந்தத்தாலன்றி வேறொன்றினால் முடியாது. விதவைகளுக்குச் சம்மதம் இருந்தாலும் இல்லாவிடினும் உடன்கட்டையேறுவது வழக்கமாயிருந்தது. உடன்கட்டையேறாமல் உலகத்தில் வசிப்பதால் அவர்களுக்கு யாதொரு சௌக்கியமில்லை. ஆதலால் இறப்பதே நல்லது என்று அவர்கள் உடன்கட்டையேறுவார்கள். இவ்வாறு பிராணனைவிடுகிற விதவைகள் சுவர்க்கலோகத்தில் தங்கள் புருஷர்களோடு மூன்று கோடியே ஐம்பதுலக்ஷவருஷகாலம் சுகித்திருப்பார்களென்று இந்துக்களுடைய தருமசாஸ்திரம் சொல்லுகின்றது. உடன்கட்டையேறாதவர்கள் தலையைச் சிரைத்துவிட்டு நகைகளைக் களைந்துபோட்டுப் பிறர்முகம் பார்க்காமல் தங்கள் பிள்ளைகளை வளர்த்துவரவேண்டும். இவ்வாறு நடந்தபோதிலும் இறந்தபின்பு சுவர்க்கலோகம் போகலாம் என்கிற நிச்சயமில்லை. உடன்கட்டையேறுகிறவர்களோவென்றால் தமது பாவத்தை நீக்கிக்கொள்வதன்றி, தம் கணவருடைய பாபத்தையும் போக்கி மேல்உலகத்தில் நெடுநாள் கூடிவாழ்வார்கள். கணவன் நரகத்துக்குப் போய்விட்டபோதிலும் அவன் மனைவி உடன்கட்டையேறுவாளாகில் அவன் நரகத்தினின்றும் நீங்கி மோக்ஷத்துக்குப் போவான். அக்பர் பாதுஷாவானவர் மகமதியசமயத்தைச் சார்ந்தவர். அந்தச் சமயத்தை உண்டாக்கியவர் மகமது என்பவர். அவருடைய பெண்சாதிகள் பதினேழுபேர். அவர்களுள் ஒருவர்தவிர மற்றெல்லாரும் விதவைகள். இதையெல்லாம் கேட்டறிந்த அக்பர்பாதுஷாவுக்கு விதவைகள் புநர்விவாகம் செய்யாதிருப்பது நியாயமாகத் தோன்றவில்லை. ஆதலால் ஹிந்துவிதவைகள் புநர்விவாகம் செய்யலாமென்று உத்தரவுசெய்து அந்த விஷயத்தில் இருந்த தடைகளையெல்லாம் நீக்கினார். மூவாயிரம் வருஷகாலமாக நடந்து வந்த வழக்கத்தை முற்றிலும் மாற்ற அவரால் முடியவில்லை. வேதாகமங்க

ளில் சொல்லி நெடுநாள் நடந்துவந்த வழக்கத்தை விடுவதற்கு இந்துக்களுக்கு விருப்பமில்லை. போதனையாலும் பலவந்தத்தாலும் வழக்கத்தை மாற்ற முடியவில்லை.

அக்பர்பாதுஷாவின் ஜீவகாலத்தின் முடிவில் அவருக்குக் குடும்பசங்கடங்கள் நேரிட்டன. அவருடைய பிரியமான மூத்தகுமாரன் குடியினால் இறந்துபோனான். அவருடைய இரண்டாவது குமாரன் கலகம் பண்ணினான். பீஜ் என்பவரும் இருந்தார். அபுல்பேஜில் என்பவனைச் சில பாதகர் கொலைசெய்துபோட்டார்கள்.

மூத்தகுமாரன் இறந்துபோனபோது அவனுக்கு வயது முப்பது. அவன் வேட்டையில் பிரியமுடையவன். குறிவைத்துச் சுடுவதில் மிகவும் திறமுடையவன். அவனிடத்தில் ஒரு துப்பாக்கி இருந்தது. அவன் மிகுதியாகக் குடித்து வெறிகொண்டு சாகக்கிடக்கும்போது மறுபடியும் குடிக்கவேண்டுமென்று கேட்டான். ஒருவரும் அவனுக்குச் சாராயம் கொடுக்கக்கூடாதென்றும், கொடுத்தால் அவர்கள் உயிரிழந்துபோகக்கடவார்கள் என்றும் உத்தரவுபிறந்தது. ஆயினும் ஒருவன் துணிந்து மேற்சொன்ன துப்பாக்கியின் குழாயில் சாராயம் அடைத்துக்கொண்டுபோய்க் கொடுத்தான். அதைக் குடித்து ராஜகுமாரன் இறந்தான். சாராயங்கொடுத்தவனும் ராஜதண்டனைக்கு ஆளாகி உயிரை இழந்தான். ராஜகுமாரனுக்கு அவனுடைய துப்பாக்கியே யமனாக முடிந்தது.

அழியாப்புகழையே ஆபரணமாக அணிந்து பிரகாசித்திருந்தவராகிய பீஜ் என்பவர் இறந்தபோது பாதுஷாவானவர் துக்கசமுத்திரத்தில் முழுகினார். பீஜ் என்பவர் சாகக்கிடக்கிறாரென்று நடுராத்திரியில் பாதுஷா கேள்விப்பட்டார். உடனே அவர் இருப்பிடத்துக்குப் போய்ப் பார்க்கும்போது அவர் ஸ்மரணைதப்பி இருந்தார். அவருடைய தலையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு: "சிநேகிதரே! அலியென்கிற வைத்தியனை அழைத்துவந்திருக்கிறேனே, நீரேன் பேசாதிருக்கிறீர்" என்றார். யாதொருபதிலும் பேசாததைக் கண்டு தொப்பியைக் கீழே எறிந்துவிட்டுப் புரண்டு அழுதார். சற்றுநேரம்பொறுத்து எழுந்து அபுல்பேஜல் என்பவரிடம் போய் அவருக்கு ஆறுதல்சொல்லி தமது இருப்பிடம் சென்றார்.

அபுல்பேஜல் கொலையுண்டதைக் கேட்டபின்பு பாதுஷாவுக்கு உண்டான வியசனம் நீங்கவேயில்லை. அவர் மகமதிய சமயத்தில் பாதுஷாவுக்குண்டான நம்பிக்கையையும் அபிமானத்தையும் கெடுக்கிறாரென்று எங்கும் வதந்திபிறந்தது. ஜீஹாங்கிர் என்னும் ராஜகுமாரனுக்கு அந்த மந்திரியினிடத்தில் கோபம் இருந்துகொண்டிருந்தது. அவன் ஒரு ஆளை நியமித்து வயதுமுதிர்ந்த அம்மந்திரியைக் கொன்று சிரசைக் கொண்டுவரவேண்டுமென்று ஆக்கியாபித்தான். ஆசியாகண்டத்தில் மந்திரிமார்களை கொலைசெய்வது அபூர்வமல்ல. ஆயினும் பிதாவுக்குப் பிரியமான மந்திரியை மகன் கொலைசெய்வது ஆச்சரியந்தான். மந்திரியைக் கொலைசெய்துவிட்டதாகப் பெருமையும் பாராட்டினான்.

பாதுஷாவுக்கு இதனால் மிகுந்த துக்கமுண்டாயிற்று. இரண்டுநாள் இரவும்பகலும் அவருக்கு ஊணுறக்கமில்லை. தம்முடைய குமாரனால் நடந்ததென்று அவருக்குத் தெரியாது. எப்படியெனில் துக்கசமயத்திலும்

தாம் முன்பு உதாசினம்செய்த குமாரனுக்கு மறுபடியும் பிரியத்தைக் காட்டினார்.

அவர் தேகவியோகம் அடைவதற்கு நான்கு வருஷத்திற்குமுன்பு எங்கிலாந்து தேசத்தை ஆண்ட எலிஜபத் என்னும் ராணியார் இந்துதேசத்திக்குத் தம்முடைய உத்தியோகஸ்தரை அனுப்பிப் பாதுஷாவினிடத்தில் கண்டுபேசி வர்த்தகம்செய்ய உத்தரவுகேட்கும்படி கட்டளையிட்டார். அதற்கு முன்னமே இந்துதேசத்தில் ஒருவித கிறிஸ்தவவகுப்பார் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். வேறு ஐரோப்பியர்கள் வருவது அவர்களுக்கு விருப்பமில்லை. ஆதலால் அவர்கள் முயற்சிசெய்துவந்த உத்தியோகஸ்தரை யாதொரு பயனுமின்றித் திரும்பிப்போகும்படி செய்துவிட்டார்கள். ஆயினும் அங்கிலேயர் சில வருஷத்துக்குப்பின்னிட்டு இந்து அரசருடைய அபிமானம்பெற்றுக் கருணாடகத்தில் வந்து வியாபாரம் செய்யத்தொடங்கினார்கள். 1653-ம் வருஷம் கொஞ்சம் நிலம் சம்பாதித்து சென்னபட்டணத்துக் கோட்டையைக் கட்டினார்கள்.

எந்த ராஜ்யத்தில் கலகமின்றிக் குடிகள் சௌக்கியமாக வாழ்கினார்களோ, அந்த ராஜ்யத்தைப்பற்றிச் சரித்திரத்தில் சொல்ல சங்கதி இராது. பாதுஷாவினுடைய அரசாக்ஷியின் இறுதியில் இவ்வாறே நடந்தது. அதற்கு முன்னில்லாதக்ஷேமம் உண்டாயிற்று. செல்வம் அதிகரித்தது. கலகம் அடங்கிற்று. பாதுஷாவும் சண்டையைவிட்டுத் தொலைத்துக் குடிகளுடைய சமாதானத்தைத் தேடினார். தமது மாளிகையிலிருந்துகொண்டும் தம்முடைய பிதாவினால் உண்டாக்கப்பட்ட சிங்காரவனத்தில் மரங்களின் நிழலில் உலாவிக்கொண்டும் ராஜாங்க நிர்வாகத்தைப்பற்றிய சட்டதிட்டங்களை ஏற்படுத்தினார். திரவியம் விருத்தியாகும்பொருட்டும் இந்துக்கள் செழித்தோங்கும்பொருட்டும் பாடுபட்டார். ஐம்பதுவருஷகாலம் இவ்வாறு பாடுபட்ட அக்பர்பாதுஷாவினால் குடிகளுக்குண்டான நன்மையை யாவரும் யோசித்துத் தெரிந்துகொள்ளலாம்.

போர்செய்து ராஜ்யங்களைப் பறித்துக் குடிகளை வருத்திய கொலைபாதகருடைய அரசாக்ஷிக்குப்பின்னிட்டு அக்பர்பாதுஷாவானவர் பட்டத்திக்குவந்து அரசாண்டால் அதை யாவர்தான் புகழ்ந்துபேசார். அவர் காலத்தில் குடிகளுக்கு என்ன குறைவு இருந்தது. நாளதுவரைக்கும் அக்பர்பாதுஷாவை ராஜசிரோமணியென்றும், தேவ அவதாரமென்றும் ஜனங்கள் புகழ்ந்து கொண்டாடுவது ஆச்சரியமா!

பிறந்தவர் யாவராயிருந்தபோதிலும் அவரும் இறக்கவேண்டியகாலம் ஒன்றிருக்கும். இயமனுக்கு அரசனென்றும் இல்லை, அகதியென்றும் இல்லை. யாவரும் அவனுக்கு இரையாகவேண்டியதுதான். உலகத்துக்கு உபகாரியாயினும் சரி, அபகாரியாயினும் சரி இருவரும் இறந்துபோவதில் சந்தேகமில்லை.

பாதுஷாவுக்கு வயது முதிர்ந்துவிட்டது. ஜீவகாலத்தைப் பின்னிடவேண்டியதாயிற்று. ஆதலால் புண்ணியகிரியைகளிலேயே காலத்தைச் செலுத்திவந்தார். ஜிஹாங்கிர் என்னும் குமாரனை அழைத்துப் பிரபுக்களெல்லாரையும் வரவழைக்கும்படி உத்திரவுசெய்தார். தம்முடைய குமாரனுக்கும் தாம் பழகிய பிரபுக்களுக்கும் சிநேகம் உண்டாக்கி மனஸ்தாப

மிருந்தால் அதைப் போக்கும்படியாக மேற்சொன்ன உபாயம்செய்தார்.
அவர்களெல்லாரும் தம்முன்னிலையில் வந்து சேர்ந்தபின்பு தாம் செய்த
குற்றங்களையெல்லாம் மறந்து மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொ
ண்டார். பின்பு குமாரனை அருகில் அழைத்துக் கட்டித்தழுவி: “என்
பிரியமான பிள்ளையே, இப்போது கடைசியாக உத்திரவுபெற்றுக்கொள்
ளுகிறேன்; இனி இவ்வுலகத்தில் சேர்ந்திருக்கமாட்டோம். அந்தப்புறத்
திலிருக்கிறவர்களைக் காப்பாற்றாமல் கைநெகிழவிடாதே; நான் அவர்க
ளுக்குக் கொடுத்துவந்த செலவே நீயும் கொடுத்துவா. நான் இறந்துபோ
னபின்பு நீ துக்கசாகரத்தில் முழுகிப்போவதிலும் என் சொல்லை மறவாதே.
நாமிருவரும் செய்த நம்பிக்கைகள் அநேகம். நீ எனக்குச் செய்துகொ
டுத்த உறுதியைக் கைவிடாதே; அதை மறக்கவேண்டாம். ஞாபகமிருக்
கட்டும். உன்னிடத்தில் எனக்கு அநேக பாத்தியம் உண்டு. அந்தப் பாத்
தியம் பெரிதாயினும் சிறிதாயினும் அதை மறவாதே. நான் பெற்ற ஜயத்தை
ஞாபகத்திலவை. குடிகளுக்கு நன்மை விளைவித்த என் செய்கைகளையும்
மறவாதே. என் வேலையாட்களையும் என்னை நம்பினவர்களையும் நான்
இறந்துபோனபிற்பாடு மறவாதே. கஷ்டதிசையில் இருப்பவர்களையும்
மறவாதே. நான் சொன்னதையெல்லாம் ஒவ்வொரு சொல்லாய் யோசித்து
ப்பார். யாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு என்னையும் மறவாதிரு,’
இவ்வாறு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவிட்டு அக்பர்பாதுஷாவா
னவர் 1605-ஹு அக்டோபர்மீ 10உ இரவில் பரகதியடைந்தார். அவர்
உலகத்துக்கு ஒப்பற்ற ஆபரணம்போன்றவர். ஜனங்களை அவர் தாயைப்
போல் பாதுகாத்தவர். ராஜாதிராஜன். மகாபெரியவர். மிக்க அதிஷ்
டம் உடையவர், ஜயம்பெற்றவர். கௌரவமே அவருடைய பிருது.
அவருடைய பெயர் ஒருகாலத்திலும் மறந்துபோகாது.

பாதுஷாவினுடைய சரமகிரியைகள் அவருடைய பெருமைக்குத்தக்
கபடி நடந்தன. ஜிஹாங்கிரும் அவருடைய குமாரர் மூன்றுபேரும்
சவப்பெட்டியை அரமனையிலிருந்து வெளியே தூக்கிவந்தார்கள். வெளி
யே வந்தபின்பு ஜிஹாங்கிர் தோளை வாங்கிக்கொண்டார். அவருக்குப் பதி
லாகப் பிரபுக்கள் தோள்கொடுத்தார்கள். ஆக்கிராபட்டணத்துக்கு நான்
குமயில்தூரத்தில் யமுனாநதிதீரத்தில் இருக்கிற சிகந்தர்பட்டணத்துக்குக்
கொண்டுபோனார்கள். அங்கே பிரேதத்தை அடக்கம்செய்து அதன்மீது
கோடியே எண்பதுலக்ஷம் ரூபாய் செலவுசெய்து கோரியொன்று கட்டி
னார்கள். அதை நாளைக்கும் பார்க்கலாம்.

மோகலாய ஜாதியாருள் அக்பர் ஒரு மாணிக்கம்போன்றவர். இந்துதேச
சரித்திரத்தில் அவருக்கொப்பானவரில்லை. அவர் நெடுநாள் அரசாண்ட
தினாலும், அவருடைய சமஸ்தானம் ஆச்சரியப்படத்தக்க பெருமையடைந்
திருந்ததினாலும் அவருடைய குடும்பசம்ரக்ஷணை திருத்தமானதாலும், புறத்
தேசாதிபதிகளோடு கௌரவமாகப் பழகிவந்தபடியாலும், இந்துதேசத்து
ஜனங்களுக்கு இனி இல்லையென்ற சௌக்கியமும் நாகரிகமும் செல்வமும்
உண்டாயிற்று. சிம்மாசனமேறிய அரசர்களுள் அக்பர்பாதுஷாவுக்கு நிகர்
இந்துதேசத்திலும் இல்லை. வேறெந்தத்தேசத்திலும் இல்லை. அவருடைய
தயையும் தயாளமும் நிஷ்பக்ஷபாதமும் தைரியமும் மிதபோஜனமும்
இன்னும் பற்பல குணங்களும் வேறெந்த அரசரிடத்திலும் காணப்படா.
அவரவருக்குத் தக்கபடி ஒரு நியாயம் சொல்லுவதில்லை. அவருடைய

உதாரகுணத்துக்குக் கரையில்லை. குடிகளுடைய நன்மைக்கு இரவும் பகலும் விடாமுயற்சி செய்பவராதலால் நாடோறும் நான்குமணிநேரத்துக்கு அதிகமாகத் தூங்கமாட்டார். அவரோடு பழகியவரை ஒருபொழுதும் மறந்துவிடார். அவருடைய பாட்டனாராகிய பேபர் சக்கரவர்த்தியைப்போல தைரியமுடையவர். சாதாரண ஜனங்கள் பயந்து பின்னடையும்படியான காரியங்களில் தாம் தைரியமாய்ப் பிரவேசிப்பார். விநோதத்தின்பொருட்டு இருநூறு மயில்தூரம் இரண்டுநாளில் சவாரிபோவார். யானைகளைப் பழக்கிச் சண்டைவிடுவதில் அவருக்கு அதிகமான பிரியமிருந்தது. ஒரு யானையின்மேலிருந்து மற்றொரு துஷ்டயானையின் முதுகில் குதிப்பார். மதம்பிடித்து ஓடும்போது அவற்றின்மேலிருந்து திடீரென்று அதின் முதுகில் பாய்வார். புலியினிடத்திலும் பயமில்லை. யாதொரு உதவியுமின்றிப் புலியை எதிர்த்துக் கொன்றிருக்கிறார். ஒரு சமயத்தில் குதிரைசவாரி செய்யும்போது எதிரில் ஒரு புலியையும் ஐந்து புலிக்குட்டியையும் கண்டு திடீரென்று பாய்ந்து ஒரு குத்திலே புலியைக் கீழேவிழுந்து சாகும்படி குத்தினார்.

இந்த தைரியத்தோடு அரசருக்குவேண்டிய புத்தியும் தளகர்த்தருக்கு வேண்டிய யோக்கியதையும் இருந்தன. ஒரு சமயத்தில் ஒரு கோட்டையை எதிர்த்து உள்ளே பிரவேசிக்கும்போது, அவருடைய தளகர்த்தன் ஒருவன் தமக்குப் பாதுஷா அவமானம் செய்ததாக எண்ணிக்கொண்டு ஆயுதங்களை எறிந்துவிட்டு நிராயுதபாணியாக சண்டைக்குப்போவதாய்ச் சொன்னான். உடனே தம்முடைய தளகர்த்தருக்கு உண்டாகிற அபாயம் தமக்கும் வரக்கடவதென்று தம்முடைய ஆயுதங்களையும் எறிந்துவிட்டார். மற்றொரு சமயத்தில் ஒரு கோட்டையை முற்றிக்கைப் போட்டார். நெடுநாளாகியும் கோட்டை பிடிபடவில்லை. அதினால் சலிப்புற்று எதிரி அரசனைத் தம்மோடு தனிச்சண்டைக்கு அழைத்தார். தமக்குச் சேனையிருந்தபோதிலும் அவர்களுடைய உயிரை மாய்ப்பதைவிட தாமிருவரும் சண்டைசெய்து ஜயித்தவர் கோட்டையை எடுத்துக்கொள்ளுவோமென்று சொன்னார்.

அக்பர்பாதுஷா உன்னத வடிவமுள்ளவர். நிறம் பழுப்பு. கண்ணும் புருவமும் கறுப்பு. புருவம் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும். அவர் அழகுள்ளபுருஷர். பலத்திலே சிங்கத்திற்கொப்பானவர். அவருடைய மார்பு விசாலமானது. அவர் ஆஜானுபாகு. அவர்தேகம் முழுமையும் பார்க்கப் பிரியமாயிருக்கும். அவர் மூக்கின்மேல் ஒரு மறு இருந்தது. சாமுத்திரிகாலக்ஷணம் தெரிந்தவர்கள் அதைப்பார்த்து அவர் மகா அதிருஷ்டவானென்று சொல்லியிருந்தார்கள். ஐம்பதுவருஷம் ஏகசக்ராதிபதியாய் இந்துதேசத்தை ஆண்ட அவருடைய அதிருஷ்டம் விசேஷித்ததென்பதற்குச் சந்தேகமில்லையே!

பொருளை விளைவிக்கும் கருவி—உழைப்பு.

உழைப்பென்பது திரவிய உற்பத்திக்கு இன்றியமையாத சாதனங்களில் ஒன்றென்று முன்னொரு சஞ்சிகையில் தெரிவித்தோம். இனி அது எத்தனைவகைப்படுமென்று சற்று விசாரிக்கவேண்டும். நாம் நாடோறும் சாப்படுகிற சாதத்தைச் சமைத்தவன் சமையற்காரன். அவனுடைய உழைப்பில்லாவிட்டால் சாதம் கிடையாது. ஆகையால் சமையற்காரனுடைய உழைப்பு அரிசியைச் சாதமாக்குவதற்கு இன்றியமையாத சாதனமென்னத்தகும். அரிசியைச் சமையற்காரனிடம் கொடுப்பதற்குமுன்னே அதைக் குத்தித் தீட்டவேண்டும். குத்தித் தீட்டுவதற்குமுன் நெல்லை உமிபோக்கி அரிசியாக்கவேண்டும். நெல்லைக் கடையிலிருந்து ஒருவர் வாங்கிவரவேண்டும். கடைக்காரன் நாட்டுப்புறத்துக்குப் போய் நெல்லை வாங்கிவருகிறான். நாட்டுப்புறத்தில் குடியானவர்கள் நெல்லைப் பயிர்செய்கிறார்கள். நெல்லைப் பயிர்செய்து சமையற்காரனிடம் வருகிறவரையில் பலபேர் அதுவிஷயத்தில் உழைக்கிறார்கள். அவர்கள் உழைப்பெல்லாம் சமையற்காரனுடைய உழைப்பைப்போல் விசேஷமானதுதான். அவ்வுழைப்பில்லாவிடில் நெல்விளையாது, விளைந்தாலும் வீடுவந்துசேராது. இவ்விஷயத்தில் உபயோகப்பட்ட பலவகை உழைப்புக்கும் அரிசியின்விலையே பிரயோஜனமாகும். அதில் வேலைசெய்த உழைப்பாளிகளுக்குத் தகுந்த கூலி கிடைக்காவிடில் அவர்கள் வேலைசெய்யமாட்டார்கள். நெல்லும் அகப்படாது. நெல் விளைந்து வீட்டுக்குக் கொண்டுவருவதற்கு மேற்சொல்லிய உழைப்புத்தவிர வேறு சில கருவிகள் உண்டு. ஏரும் கலப்பையும் நிலத்தை உழுவதற்கு வேண்டிய கருவிகள். அவற்றைச் செய்தவர்கள் கருமார். அவர்களுக்கு இருப்புச்சன்னமும் விறகும் வேண்டும். இருப்புச்சன்னத்தைப் பூமியிலிருந்து வெட்டியெடுப்பவர் சிலர். அதை உருக்குவதற்குச் சாலைக்குக் கொண்டுவருபவர் சிலர். உருக்கும் தொழிலில் உழைப்பவர் சிலர். உருக்கியான இருப்புப்பாளங்களைக் கடைக்குக் கொண்டுபோகுவோர் சிலர். அதை விற்று வியாபாரம் செய்குவோர் சிலர். விறகும் இப்படியே. நாம் சாப்படுகிற சாதத்துக்கு இவ்விதமான உழைப்பு வேண்டியிருக்கின்றது. இந்தப் பலவகைப்பட்ட உழைப்பில் சமையற்காரனுடைய உழைப்பு நேராகப் பிரத்தியக்ஷமாய்த் தெரிகின்றது. மற்ற உழைப்பெல்லாம் யோசித்துப்பார்த்தால் தெரியவரும். இருப்புச்சன்னத்தை வெட்டியெடுப்பது முதல், நெல்லைக்குத்தி அரிசியாகச் செய்வதுவரைக்கும் உழைப்பு பரம்பரையாக உபயோகப்படுகின்றது. பரம்பரையாக உபயோகப்படுகிற உழைப்பை இவ்வளவென்று தீர்மா

னிப்பது அருமை. அது கணக்குக்கு அடங்காது. மேற்சொல்லிய வேலைக்காரரெல்லாம் அரிசி விலையாகிறவனைக்கும் காக்கிறதில்லை. கடைக்காரனிடத்தில் அரிசிவாங்கும்போது அவனுடைய உழைப்புக்கும் அவனுக்குமுன் உழைத்த வேலைக்காரருடைய வேலைக்கும் போதுமான பிரயோஜனத்தை அரிசியின் விலையாகக் கொடுக்கிறோம். நெல்லை வியாபாரி வாங்கும்போது அதைப் பயிரிட்டது முதலாகிய பலவித உழைப்புக்கு அவன் பிரயோஜனம் செய்கிறான். இவ்வாறே ஒவ்வொரு வியாபாரியும் தனக்கு முன்னிட்ட உழைப்பாளிகள் யாவருக்கும் மொத்தமாகப் பணங்கொடுத்துப் பொருள்களை வாங்குவார்கள்.

சிலசமயங்களில் சாமான்களைத் தூரதேசங்களிலிருந்து கப்பல்வழியாகக் கொண்டுவருகிறோம். நமக்கு வரப்பட்டபளிங்கு சாமான்களும் வஸ்திரமும் இங்கிலாந்து தேசத்திலிருந்து கப்பலில் கொண்டுவரப்படுகின்றன; அப்பொருள்களை விலைக்கு வாங்கும்போது கப்பல்செய்த வேலைக்காரருக்கும், கப்பலோட்டிகளுக்கும் அவரவர்கள் உழைப்புக்குத்தக்கபடி பிரயோசனம் செய்கிறோம். சாமான்களை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குக் கொண்டுபோகிற வண்டிக்காரருடைய உழைப்பும், அவ்வண்டிகளைச் செய்த தச்சருடைய உழைப்பும் மேற்சொன்ன மாதிரியாகவே பிரயோஜனமடைகின்றன. இவர்களுடைய உழைப்பெல்லாம் பரம்பரையான உழைப்பு. இது ஐந்துவகைப்படும். அவற்றை ஒவ்வொன்றாகக் கீழே சொல்லி விவகரிப்போம்.

முதலாவது: சாமான்களை உற்பத்திசெய்கிற உழைப்பு. வீடுகட்டவேண்டுமானால் மரம், கல், சுண்ணாம்புமுதலிய சாமான்களை முதலில் சேகரித்து வைக்கவேண்டும். இந்த சாமான்களைக்கொண்டு கொத்தரும் தச்சரும் இன்னும் சிற்சில கூலி ஆட்களும் சேர்ந்து வீட்டைக் கட்டி முடிப்பார்கள். கொத்தர்முதலான வேலைக்காரருக்குப் பயன்படுவதால் கல், மரம் முதலானவற்றைச் சாமான்களென்று சொல்கிறோம். பருத்தி பயிர்செய்கிறவர்களுடைய உழைப்பெல்லாம் பின்னிட்டுத் துணிநெய்கிறவர்களுடைய வேலைக்குச் சாமான் உண்டாக்குவதுதான். திருநெல்வேலியில் விஸ்தாரமாகப் பருத்தி பயிர்செய்கிறார்கள். அந்தப் பருத்தி விளைந்தபின்பு அதைக் கோட்டைபோக்கி இங்கிலாந்து தேசத்துக்கு அனுப்புவார்கள். அங்கே இருக்கிற கைக்கோளர் அந்தப் பருத்தியால் துணி நெய்வார்கள். கைக்கோளருடைய வேலைக்கு உதவிய சாமான் பருத்தி. அப்பருத்தியை உற்பத்திசெய்தவர்கள் திருநெல்வேலி ரெட்டிகள். ஆகையால் அந்த ரெட்டிகள் உழைப்பெல்லாம் வேலைக்கு உதவுகிற சாமான்களை உற்பத்திசெய்வதற்கு உபயோகப்பட்டன. கப்பல்செய்யவேண்டுமானால் மரமின்றி முடியமாட்டாது. அந்த மரத்தை வெளித்தேசங்களிலிருந்தும், நாட்டிலிருக்கிற சில காட்டிலிருந்தும் கொண்டுவருகிறோம்.

கோயம்புத்தூரில் விஸ்தாரமான காடுகள் உண்டு. அங்கிருந்து விற்பனைக் காக மரங்கொண்டுவருகிறார்கள். காடுகளில் அநேக கூலி ஆட்களை நியமித்து மரங்களை வெட்டிச்சாய்த்து அவற்றைத் துண்டுகளாக்கிச் செதுக்கி வெளிக்கு அனுப்புகிறது வழக்கம். மேற்சொல்லிய ஆட்களு டைய உழைப்பினால் கப்பல்வேலைக்குச் சாமான் உற்பத்தியாகின்றது. ஆதலால் அவர்களுடைய உழைப்புச் சாமான் உற்பத்திசெய்கிற உழைப் பாகும். நெல்முதலாகிய தானியத்தைப் பயிர்செய்கிறவர்களுடைய உழை ப்பும் இப்போது பேசிவரும் வகுப்பில் சேர்ந்ததுதான். தானியமெல்லாம் சமையற்காரனுடைய வேலைக்குச் சாமானாகின்றது. இவ்வகுப்பில் சேர்ந்த வேலைகள் பல உள. அவற்றையெல்லாம் சாமான்களை உற்பத்திசெய்கிற உழைப்பாகவே பாவிக்கவேண்டியது.

இரண்டாவது: பரம்பரையான வேலைகளில் முதலாவதை இன்ன தென்று ஒருவாறு சொல்லிமுடித்தோம். இனி இரண்டாவதான உழை ப்பு எப்படிப்பட்டதென்று ஆலோசித்துப்பார்ப்போம். தச்சனுடைய வேலைக்கு மரம் இன்றியமையாத சாமான். மரம் இல்லாவிடில் தச்சன் வேலைசெய்ய இடமிராது. மரத்தைப்போலவே உளிமுதலிய கருவிக ளும் இன்றியமையாத சாதனங்களாம். உளி இல்லாமல் தச்சன் வேலை செய்யமுடியாது. தச்சனுடைய வேலைக்கு இன்றியமையாததாகிய மரத் தை உற்பத்திசெய்கிறவர்களுடைய உழைப்பைச் சாமானுற்பத்திசெய்கிற உழைப்பென்று சொன்னோம். அவனுடைய உளிமுதலிய கருவியையும் முன்னதாக ஒருவன் செய்திருக்கவேண்டும். அந்த உழைப்பே கருவி களைச் செய்யும் உழைப்பென்று சொல்லப்படும். இவ்வுழைப்பில்லாமல் அநேக வேலைகள் முடியாது. சாமானும் கருவியும் இன்றி யாதொன்றும் நிறைவேறுவதாகக் காணோம். வண்டிசெய்வதற்குப் பலகையும், உளி, வாள் முதலிய கருவியும் வேண்டும். இவற்றில் எதைச் சாமானென்றும், எதைக் கருவியென்றும் சொல்கிறது. சாமானுக்கும் கருவிக்கும் இருக்கிற வித்தி யாசம் என்ன? மரமும் கல்லும் வீடுகட்டுவதற்குச் சாமான்களாயிருக்கின் றன. வீடுகட்டி ஆனபின்பு மரத்தையும் கல்லையும் அதினின்று பிரித் தெடுத்தல் கூடாது. உளியும் கொல்லேறுமோ என்றால் அநேக வீடுகட்டு வதற்கு உபயோகப்படும். ஒரு வேலைக்கு உபயோகப்பட்டு அதினின்றும் பிரிக்கப்படாததையெல்லாம் சாமானென்று சொல்லப்படும். பலவேலைக்கு உபயோகப்படுகிறதெல்லாம் கருவியென்று சொல்லப்படும். கலப்பை யும் மண்வெட்டியும் கருவிகள். பட்டும் பருத்தியும் சாமான்கள். கருவி யைச்செய்கிற உழைப்பெல்லாம் இரண்டாவது வகுப்பிற்சேர்ந்த பரம் பரையான உழைப்பு.

மூன்றாவது: உழைப்புக்குச் சாமானும் கருவியும் வேண்டுமென்றும், அவைகளில்லாமல் ஒரு வேலையும் நிறைவேறமாட்டாதென்றும் இதுவரை

க்கும் சொன்னோம். உழைப்புக்கு இவைகள்மாத்திரம் போதாது. கைக்கோளர் துணிநெய்கிறதற்கு நூலும் கருவியுமாத்திரம் இருந்தால் வேலை நிறைவேறாது. வேலைசெய்வதற்குத்தக்க இடமும்வேண்டும். வண்டிசெய்கிறதற்கு மரமும் உளிமுதலிய கருவியும்தவிர ஒரு தகுந்த இடமும் வேண்டும். அந்த இடத்தைத் தச்சவாடி என்று சொல்லக்கேட்டிருக்கிறோம். நெல் விளைந்தபின்பு அதைப் பதர் நீக்குவதற்குக் களமும், நெல்லைக் கொட்டி வைப்பதற்குக் களஞ்சியமும் வேண்டும். பயிரிடுவதற்கு மாடுகளிருக்கவேண்டும். அவற்றைக் காற்றிலும் மழையிலும் அடிபடாதபடி காக்கும்பொருட்டு ஒரு கொட்டகை கட்டவேண்டும். தச்சவாடி, களஞ்சியம், கொட்டகை முதலியவற்றைக் கட்டுகிறவேலை மூன்றாவது உழைப்பில் சேர்ந்தது. அது பாதுகாக்கும் உழைப்பென்று சொல்லப்படும். ஆடுமாடு மேய்க்கிற இடையர் உழைப்பெல்லாம் மேற்கூறியவகையில் சேர்ந்தவைதாம். பயிர்களை ஆடுமாடுகள் மேய்ந்துவிடாதபடி வயல்களைச் சுற்றி வேலிபோடுவதுண்டு. வேலிபோடுகிற உழைப்பும் பாதுகாக்கிற உழைப்பென்று சொல்லப்படும். தோட்டத்தைச்சுற்றிச் சுவர்கட்டுகிறவேலையும் அப்படியே; நியாயாதிகாரியின் உழைப்பும் போலீசுசேவகர் உழைப்பும் தேசத்திலுண்டாகிற திரவியத்தைக் காப்பாற்றும்பொருட்டு உபயோகப்படுகின்றது. ஆகையால் அவர்களுடைய வேலையையும் மேற்சொல்லிய வகுப்பிலேயே சேர்த்துப் பேசவேண்டும்.

நான்காவது: கிராமங்களில் தானியம் விளைந்தபின்பு அது எவ்விதமாக ஜனங்களுக்குப் பயன்படுகின்றது. விளைந்த இடத்திலேயே அது இருக்குமானால் ஒருவருக்கும் உபயோகப்படமாட்டாது. அது விலையாகிற இடத்துக்குக் கொண்டுபோகவேண்டும். ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்துக்குச் சரக்கு கொண்டுபோகவேண்டுமானால் தரையிலாவது ஜலத்தின்மேலாவது கொண்டுபோவார்கள். தரையின்மேல் போவதற்கு வண்டிகளும் கூலிஆட்களும் வேண்டும். புகைவண்டிபோகிற இடமானால் அதுவழியாகச் சாமான் எளிதில் அனுப்பலாம். ஜலத்தின் மேல் சாமான் போகவேண்டுமானால் கப்பலாவது தோணியாவது இருக்க வேண்டும். இப்படிப் பலவிதமாக சாமான்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டுபோவார்கள். கொண்டுபோகிற உழைப்பெல்லாம் நாம் சொல்லிவருகிற நான்காவது வகுப்பில் சேரும். வண்டி, கப்பல், தோணி, ரோட்டுமுதலானவற்றைச் செய்த உழைப்பும் மேற்படி வகுப்பில் சேர்ந்ததுதான். சாமான்களை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குக் கொண்டுபோய் விற்று ஜீவனஞ்செய்கிறவர்கள் அநேகர் உண்டு. சென்னபட்டணத்தில் நெல்விளைகிறதில்லை. அங்கிருக்கிற ஜனங்களுக்கு வேண்டிய நெல், கம்பு, கேழ்வரகு முதலிய தானியமெல்லாம் வெளித்தேசத்திலிருந்து புகைவண்டியிலாவது, கட்டைவண்டியிலாவது, தோணி,

அல்லது கப்பலிலாவது கொண்டுவரப்படுகின்றது. கொண்டுவருவதற்கு அநேக ஆட்கள் உழைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பும், வண்டி முதலான கருவிகளைச் செய்த உழைப்பும் இல்லாமல் நாட்டில் விளைந்த நெல் சென்னபட்டணம்வந்து சேராது. தானியத்தை விளைவிக்கிற உழைப்பைப்போலவே அதைக் கொண்டுவருகிற உழைப்பும் விசேஷமானது. இந்த உழைப்பெல்லாம் தானியத்தின் விலையாற் பிரயோஜனம் அடைகின்றது. சென்னபட்டணத்தில் கட்டியிருக்கிற வீட்டுக்கு விஸ்தாரமான மரம் செலவாயிருக்கிறது. இந்த மரம் சென்னபட்டணத்தில் விளைகிறதல்ல. வெளித்தேசங்களில் உள்ள காடுகளிலிருந்து வெட்டி புகைவண்டியிலாவது, கட்டைவண்டியிலாவது, கப்பல்மார்க்கமாயாவது கொண்டுவருகிறார்கள். அங்கிருந்து வந்தாலொழிய வீட்டில் மரவேலை நிறைவேறாது. வெளியிலிருந்து மரம் கொண்டுவருவதற்குச் செலவு அதிகமாய்ப் பிடிக்கும்; அந்தச் செலவையும் மரத்தின் கிரயத்தையும் கொடுத்து அதை வாங்கி வீடுகட்டுவார்கள். ரோட்டுகளெல்லாம் துரைத்தனத்தாரால் போடப்படுகின்றன. ஆயினும் அதற்குச் செல்லும் செலவை நிலவரியாகவும் ரோட்டுவரியாகவும் குடித்தனக்காரர் கொடுத்துவருகிறார்கள்.

ஐந்தாவது: மன உழைப்பு. வீடுகட்டுவதற்குச் சாமானும் கருவியும் போல, இன்னவிதமாக வீடுகட்டி முடிக்கவேண்டுமென்று அறிவும் இருக்கவேண்டும். கல்லும் மண்ணும் மரமும்மாத்திரம் இருந்தாற் பயனில்லை. வீடுகட்டுந்தொழில் தெரிந்திருக்கவேண்டும். இது மன உழைப்பு என்று சொல்லப்படும். கொத்தனிடத்தில் வேலைசெய்து வீடுகளும் மண்டபங்களும் ஆலயங்களும் எவ்விதமாகச் சமைப்பதென்று கற்றறியவேண்டும். அதற்கு மனஉழைப்பின்றி முடியாது. பயிரிடுவதற்கும் மன உழைப்பு வேண்டியிருக்கின்றது. இத்தேசத்தில் பயிரிடுகிற விதத்தை யாவரும் எளிதில் கற்றுணரலாம். அது பயிரிடுகிற முறைமையன்று. பயிரிடுகிற சாத்திரத்தை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமானால் நாலைந்து வருஷம் செல்லும். எத்தொழிலிலாவது தேர்ச்சியடையவேண்டுமானால் நெடுநாள் செல்லும். அதுவரைக்கும் மன உழைப்பும் இருக்கவேண்டும். மேசையும் நாற்காலியும் செய்யவேண்டியிருந்தால் யாவரும் அவற்றைச் செய்து முடிப்பது கூடாது. தச்சனுடைய வேலை கற்றவனால்தான் முடியும். துணிநெய்கிறதானாலும், நகைகள் செய்கிறதானாலும் அவ்வவ் வேலைகற்றவனால்தான் கூடும். அவற்றைக் கற்பதற்கு மன உழைப்பு வேண்டியதாய் இருக்கின்றது.

ஒருவரிடத்திலிருந்து வேலை கற்றுக்கொள்வது எளிது. ஒருவருக்கும் தெரியாத வேலையைப் புதிதாய்க் கண்டுபிடிப்பது மிகவும் அரிது. நீராவி யந்திரங்களை முதலிற் செய்தவர்கள் விசேஷமான மன உழைப்பு எடுத்திருக்கவேண்டும். இதைப்போன்றதெல்லாம் மன உழைப்பென்று சொல்லப்படும்.

தக்காணத்துப் பூர்வகதைகள்.

மந்திரவாதி (தொடர்ச்சி.)

ஒரு அரசன் தன் மனைவி இறந்துபோனபின்பு அநாதையான தன் பெண்களைப் பரிவோடு பாதுகாத்துவருகையில், தன் வீட்டுக்கு வழக்கமாய் வந்துகொண்டிருந்த கைம்பெண்ணான தன் முதன்மந்திரிப் பெண்சாதியின் மோசவலையிற் சிக்கி, அவளைத் தன் அந்தப்புரத்தில் சேர்த்துக்கொண்டான். பிறகு அந்த வைப்பாட்டித்தாய் தங்களைப் பலவிதமாய்ப் பகைப்பதுகண்டு அந்தப் பெண்கள் தங்கள் மாதாவின் கோரியண்டைபோய்ப் புலம்பிக்கொண்டிருக்கையில் அதன் அருகே ஒரு சிறு குட்டையில் பாலடைக்கட்டிபோன்ற ஒருவகைப் பணியாரங்கள் நிறைந்திருக்கக்கண்டு அதைத் தின்றுகொண்டு ஜீவித்துவந்தார்களென்று சென்ற சஞ்சிகையில் முடிந்தது. மேற்கதையைப் பின்வருமாறு காண்க.

அந்தப்பெண்கள் பிழைக்கிறவழியைக் கேட்கவே அந்த வைப்பாட்டி கோபந்தலைக்கொண்டு, உடனே வேலைக்காரர்களைக்கூட்டி முன் இறந்த ராணியார் கோரியையிடித்து அந்தக் குளத்தைத் தூர்த்துப்போடும்படி உத்தரவுசெய்து, அதிலும் திருப்தியடையாமல் தனக்கு தேகம் சிறிதும் அனுகூலமில்லாதிருப்பதுபோல் பாசாங்கு பண்ணினாள். அற்பசொற்பமான ஸ்திதியிலிருப்பதாயல்ல, உயிர்போகப்போகிற தருணமென்று நடித்தாள். அதுகேட்டு அரசன் மிகவும் சோகமடைந்து, அந்தநோய் சிகிச்சைக்குச் சாத்தியமாகுமா ஆகாதா? என்றுகேட்க: அவள், என்னைப் பிழைப்பூட்டத்தக்க மருந்து ஒன்றே ஒன்றுதானுண்டு; அதை நீர் செய்யமாட்டீர்; சொல்லிப் பயனென்னவென்றாள்? அதற்கு அவன்: எதுவானாலும் செய்துமுடிக்கிறேன் என்றுசொல்லவே, அவள்: உமது மூத்தமனையாளுடைய ஏழுமகளையுங்கொன்று, அவர்களுடைய ரத்தத்தை என் முகத்திலும் கைகளிலும் கால்களிலும் தெளித்தால் பிழைத்துப்போவேன் என்றாள். இந்தவார்த்தை அரசனுக்கு மிகவும் மனத்துயரமுண்டாக்கிற்று. ஆயினும் அவள் வார்த்தையைத் தள்ளக்கூடாமையால் அவள் இஷ்டத்தை நிறைவேற்றும்படி தன் பெண்களைத் தேடிப்போக, அப்பெண்களெல்லாம் இடித்துப்போட்ட தங்கள் தாயின் கோரியண்டை உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கக் கண்டு, இரங்கிக் கொல்ல மனம்வராமல் தன்னோடுகூடக் காட்டுக்கு வரும்படி வேண்டி அழைத்துக்கொண்டுபோனான். அங்கே அவன் கொஞ்சம் சோறு சமைத்துக்கொடுக்கவே அதைப்புசித்து அவ்வேழுபெண்களும் நடந்துவந்த வருத்தத்தாலும் வெயிலாலும் அயர்ந்து தூங்கிப்போனார்கள். அரசன் அத்தருணங்கண்டு, 'இந்த அநாதைப்பெண்கள் அவள்கையில் அகப்பட்டு மடிந்துபோவதைவிட இங்கேயே உயிரிழந்துபோனால் உத்தமமென்றெண்ணி, தன் மனையாளிடத்திலுள்ள பயத்தினால் அவர்களை அங்கேயே விட்டுவிட்டு

ஒரு முயலைக்கொன்று அதின் ரத்தத்தைக் கொண்டுபோய் அவளு டம்பில் பூசினான். அவ்வேழுபெண்களும் இறந்துபோனார்களென் றெண்ணி அவளும் ஆநந்தபூரிதையாய்த் தன் நோய் நீங்கிற்றென்று எழுந்து சுகித்திருந்தாள்.

இப்படியிருக்க, நடுக்காட்டிலே படுத்துத் தூங்கிக்கொண்டிரு ந்த ஏழுபேரும் எழுந்து, அண்டையில் ஒருவருமில்லாமல் தாங் கள்மாத்திரம் நடுக்காட்டிலே நிற்பதுகண்டு பயந்து தங்கள் தகப் பனார் தங்குரலைக்கேட்டு ஒருவேளை வருவரோவென்று தங்களால் கூடியவளவு உரத்துக்கூவத் தலைப்பட்டார்கள். அதற்குள் அவன் வெகுதூரம் போய்விட்டானே. இவர்கள் கோடையிடிபோலத் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கூவினாலும் அவனுக்குக் கேட் குமோ?

அன்றையதினம் அண்டைப்பட்டணத்து ராஜகுமாரர்கள் அந் தக் காட்டிற்கு வேட்டையாட வந்திருந்தார்கள். வேட்டையாடிய பிறகு அவர்கள் வீட்டுக்குப்போகத் திரும்புகையில், கடைக்குமா ரன் தன் தமையன்மார்களைப் பார்த்து: "கொஞ்சம் நிதானியுங் கள், ஏதோ இங்கே அழுகைக்குரல் கேட்பதுபோலிருக்கிறது. அந் தக் கூக்குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா? என்னவோ அதைப் போய் விசாரிப்போம்" என்றுசொல்லவே, எல்லாரும் அந்தக் கூச் சல் வருகிறவழியே பார்த்துக்கொண்டுபோய், அங்கே புலம்பிக் கூவிக்கொண்டிருந்த பெண்களைப்பார்த்து ராஜகுமாரர்கள் ஆச் சரியப்பட்டு, அவர்கள் கதையைக்கேட்கவே பின்னும் அதிகமாய் வியப்படைந்து, தாங்கள் ஏழுபேரும் அந்த ஆதரவற்ற பெண்களைப் பேருக்கொன்றாகக் கொண்டுபோய்க் கலியாணஞ்செய்துகொள் ளும்படி ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்படியே மூத்தகுமாரன் மூத்தமகளையும், இரண்டாம்குமாரன் இரண்டாம்பெண்ணையும், மூன்றாம்குமாரன் மூன்றாம்பெண்ணையும், நான்காம்குமாரன் நான் காம் பெண்ணையும், ஐந்தாம்குமாரன் ஐந்தாம்பெண்ணையும், ஆறா ங்குமாரன் ஆறாம்பெண்ணையும், விசேஷமான வீரியமும் சாமர்த் தியமுமுள்ள ஏழாங்குமாரன் சுந்தரமான சிங்காரம் என்பவளையு மாய் ஏற்றுக்கொண்டார்கள். பட்டணம்போய்ச் சேர்ந்தவுடன் கோலாகலமாய் ஏழுபேருக்கும் கலியாணம்நடந்தது.

இப்படியிருக்கையில் ஒரு வருஷத்தில் சிங்காரத்திற்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பெரிய தந்தை யர்களும் தாய்களும் தங்களுக்குப் பிள்ளையில்லாமையால் தங்கள் தங்கள் சொந்தபிள்ளைபோலவே அதைப் பாராட்டிவந்தார் கள். அக்குழந்தை அவ்வேழுபேருக்கும் பிள்ளையாய் மிகச்சிறப் புடன் வளர்ந்துவந்தது.

இப்படியே சந்தோஷமாய்ச் சிலகாலம்சென்றது. அப்படியி ருக்கையில் ஒருநாள் சிங்காரத்தின் புருஷனான ஏழாவது ராஜகுமா

சன் வேட்டையாடிவருவதாய்ப் புறப்பட்டுப்போனான். மற்றவர்கள் அவன் வரவை வெகுநாள் எதிர்பார்த்திருந்தார்கள். அவன் திரும்பிவரவில்லை. அதனால் அவன் ஸோதரர்கள் ஆறுபேரும் அவன் போனவழியைப் பார்த்துவருவதாய்ப் போனார்கள். அவர்களும் திரும்பிவரவில்லை. அதுகண்டு தங்கள் புருஷர்களுக்கு என்ன அபாயம் நேர்ந்துவிட்டதோவென்று அவ்வேழு ராஜகுமாரத்திகளும் மிகவும் விசனமடைந்திருந்தார்கள்.

இன்னும் என்னென்ன அதிசயங்கள் நடந்தனபாருங்கள்! இது நடந்த கொஞ்சநாளைக்கெல்லாம் ஒருநாள் சிங்காரம் தன் குழந்தையைத் தொட்டிலில்விட்டுத் தாலாட்டிக்கொண்டிருந்தாள். மற்ற ஆறுபெண்களும் அவரவர்களுக்குரிய வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஒருவன் பிச்சைக்காரன் போல் உடம்பெல்லாம் கரித்துணிபோர்த்துக்கொண்டு அரண்மனை வாயிலில் வரக்கண்டு, அங்கு இருந்த காவலாளர்கள்: இது நீ உள்ளே போகத் தருணமன்று. ராஜகுமாரர்களெல்லாம் வெளியேபோயிருக்கிறார்கள். அவர்களெல்லாம் அங்கேயே மடிந்துபோனதுபோற் காண்கிறது. இந்தவேளையில் நீ போய் அந்த விதவைப்பெண்களை ஒன்றும் வருத்தப்படுத்தாதே என்றுசொல்ல, அவன்: "நான் மிகவும் பரிசுத்தனான ஒரு சன்னியாசி, என்னை உள்ளே விடுவதனால் என்னதீங்கு நேரும்?" என்று நயமாய்ப் பேசினதால் அந்த மூடவாசற்காரர்கள் அவன் சன்னியாசியன்று, ஒரு கெட்டமந்திரவாதியென்று அறிந்துகொள்ளாமல் அவனுக்கு உள்ளேபோக உத்தரவுகொடுத்தார்கள். அந்த மாய்சன்னியாசி அரண்மனைக்குள் நுழைந்து அங்குள்ள பல அழகான காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சிங்காரம் தொட்டிலாட்டிக்கொண்டிருக்கும் இடத்திற்குவந்து அவளைப்பார்த்து: தான் பார்த்த பொருள்களில் இவ்வளவு அழகியது எங்குமில்லையென்று அதிசயித்துத் தன்னைக் கலியாணஞ்செய்து கொள்ளத் தன்னோடு கூடவந்துவிடும்படி அவளை வேண்டினான். அதற்கு அவள்: என் கணவன் இறந்துபோனதாய்த் தோன்றுகிறது; என் பிள்ளையோ பச்சைக்குழந்தை. இனி இவன் நல்ல வல்லவனாகவேண்டிய வழிகளை இவனுக்குக் கற்பித்துக்கொடுத்து வயதுவந்தபிறகு உலகமெல்லாந்தேடி இவன் தந்தையின் செய்தியைத் தெரிந்துகொண்டு வரச்செய்யவேண்டும். அப்படியிருக்க, இக்குழந்தையை அநாதையாய் விட்டுவிட்டு வந்து உன்னைக் கலியாணஞ் செய்துகொண்டால் தெய்வஞ்சகிக்குமா?" என்றாள். அதைக் கேட்கவே, அந்த மந்திரவாதி கோபமீறி, "நீயே உள்ளுறச் சம்மதித்து என்னுடன் வரமாட்டேனென்றதனால் உன்னை நான் இப்படிச்செய்கிறேனென்று சொல்லிக்கொண்டே அவளைச் சிறிய கறுப்பு நாயாய் மாற்றி வெளியே இழுத்துக்கொண்டுபோனான். ஐயோபாபம்! அவ்ளென்ன செய்யமாட்டுவள்; அவன் கையினின்

றும் தப்பித்துக்கொள்ளச் சக்தியில்லையே! அதனால் தான் இன்னவிதமானாளென்றுகூடத் தன் ஸோதரிமார்களுக்குத் தெரிவிக்கக்கூடாமல் அவன் இழுத்தவழியிற் போம்படிநேரிட்டது. அந்த அரண்மனை வாசற்காரர்கள் இந்த அற்புதமான நாய் உனக்கு எங்கே கிடைத்ததென்று கேட்டதற்கு, மந்திரவாதி: இதை எனக்கு இங்கே ஒரு பெண் வெகுமதியாகக் கொடுத்தாளென்று சொல்லவே, அவர்கள் தடுக்காமல் போம்படி வழிவிட்டார்கள்.

அவன்போன கொஞ்சநேரத்துக்கெல்லாம் குழந்தை அழத்தலைப்பட்டது. அதைக்கேட்டு அவன் அத்தைமார்கள் அங்கே போய்ப்பார்த்துச் சிங்காரத்தைக் காணாமல் திடுக்கிட்டு, எங்குந் தேடி வாசற்காரர்களைக் கேட்டார்கள். ஒரு சன்னியாசி வந்த செய்தியையும், அவன் கொண்டுபோன நாயின் செய்தியையும் அவர்கள் சொல்லவே, அப்படித்தானிருக்கலாமென்று ஊஹித்து அதைப்பார்த்துக் கொண்டுவரும்படி நாலாமூலையும் ஆள்களைத் தூரத்தினார்கள். சன்னியாசியும் அகப்படவில்லை, நாயும் அகப்படவில்லை. ஐயோ! இந்த எளிய பெண்கள் ஆறுபேர்களும் என்ன செய்யமாட்டுவார்கள்! தங்கள் பர்த்தாக்களையும், தங்கையையும், அவள் பர்த்தாவையும் இனி காணப்போகிறதில்லையென்று நிராசையாய் அன்றுமுதல் அக்குழந்தையைச் செம்மையாய்ப் பாதுகாப்பதிலேயே கண்ணாயிருந்தார்கள்.

இப்படிக் கொஞ்சகாலமாயிற்று. அந்தக் குழந்தைக்குப் பதினான்கு வயதாயிற்று. அப்போது ஒருநாள் அப்பெண்கள் ஆதி தொடங்கித் தங்கள் கதையைச் சொல்லக்கேட்டு அந்தக் குமாரன் உடனே புறப்பட்டுப்போய்த் தன் தாய்தந்தையர்களையும், பெரியதகப்பன்மார்களையுந் தேடி அழைத்துக்கொண்டுவரப் பேராவல் கொண்டான். அவன் தீர்மானத்தையறிந்து அப்பெண்கள் மிகவும் பயந்து, அப்பா! நாங்கள் எங்கள் நாயகர்களையும், தங்கையையும், அவள் நாயகனையுமிழந்திருக்கிறோம். எங்களுக்கெல்லாம் நீ ஒருவன்தான் ஆதாரமாயிருக்கிறாய். நீயும் போய்விட்டால் நாங்கள் என்னசெய்வோமென்று சொல்லித் தடுக்கமுயன்றார்கள். அதற்கு அவன், அம்மா! நீங்கள் அதைரியப்படவேண்டாம். நான் சீக்கிரத்தில் திரும்பிவருகிறேன்; கூடுமானால் அவர்களையும் அழைத்துக் கொண்டுவருவேனென்று சொல்லி தேசயாத்திரையாய்ப் புறப்பட்டான். சிலமாதம்வரையில் அவனுக்கு அவர்களைப்பற்றி ஒரு செய்தியும் அகப்படவில்லை.

அவன் வெகுநாள் வெகுதூரம் அலைந்து ஓய்ந்து நிராசையாய்ப் போனபின்பு, ஒருநாள் ஒரு தேசத்திற் சென்றான். அங்கே பெரிய கோபுரமுள்ள அரண்மனையும், அதின் சமீபத்தில் பூந்தோட்டக்காரன் குடிசையொன்றுமிருந்தன. அந்தக் குடிசையின் வழியாய்த் தேடிக்கொண்டுபோகையில், அந்த வீட்டுக்காரி இக்

தக் குமாரனையழைத்து, "அப்பா குழந்தாய், நீ யார்? இந்த அபாய கரமானவிடத்திற்குத் துணிந்துவந்தையே" என்று கேட்டதற்கு, அவன்: "நானொரு ராஜகுமாரன்; என் தகப்பன்மார்களையும் தாயையுந் தேடிக்கொண்டுவந்தேன். அவர்களை ஒரு கேடுகெட்ட மாயவாதி சூன்னியஞ்செய்துபோட்டான்" என்று சொல்லவே, அவள்: இந்தத் தேசமும் இந்த அரண்மனையும் ஒரு மாயவாதியி னுடையவை. அவன் மகா வல்லமைசாலி; யாராவது அவனுக்கு விரோதஞ்செய்வார்களானால் உடனே அவர்களை மரங்களாகவும் கற்களாகவும் செய்துபோடுவான். இதோ அபாரமாய்க் கற்களும் மரங்களும் தென்படுகின்றனவே; இவையெல்லாம் முன் ஒருகால் மனிதர்களாயிருந்தவை. இந்த மந்திரவாதிதான் இப்படிச் செய்து போட்டான். சிலகாலைக்குமுன்னே இங்கே ராஜகுமாரன் ஒரு வனும் பின்பு அவன் அண்ணன்மார்கள் ஆறுபேரும் வந்தார் கள்; இவன் மாயத்தால் அவர்களெல்லாம் கற்களாகவும் மர ங்களாகவுமானார்கள். இதுமாத்திரமேயல்ல, ஒரு ராஜஸ்திரீயை யுங் கொண்டுவந்திருக்கிறான். அவள் தன்னைக் கலியாணஞ்செய்து கொள்ளமாட்டேனென்றதனால் பன்னிரண்டுவருஷமாய் அவளைச் சிறைவைத்திருக்கிறானென்றாள். அந்தக் குமாரன் அதைக் கேட்க வே, அவர்கள்தாம் நமது பிதாக்களென்றெண்ணி, அங்கேயே சில நாளிருந்து அவர்கள் செய்தியைச் செம்மையாய் விசாரிக்கக் கொஞ் சம் ஒத்தாசைசெய்யும்படி அந்தத் தோட்டக்காரியைவேண்டினான். அப்படியே ஆகட்டுமென்று அவள் வாக்குக்கொடுத்ததுமன்றி, இந் தக் குமாரனைக் கண்டால் அந்த மந்திரவாதி இவனையும் கல்லாக மாற்றிவிடுவானென்று பயந்து அவனை மாறுவேஷந் தரிக்கச் சொன்னாள். அதற்கு அவன் சம்மதித்ததனால் அவனுக்குத் தன் பெண்போல வேஷம்போட்டுவைத்தாள்.

ஒருநாள் இந்த வேஷதாரிப்பெண் விளையாடிக்கொண்டிருக் கையில் அந்த மாயாவிகண்டு, நீ யாரென்று கேட்டதற்கு, அந்தப் பெண்: "நான் இந்தத் தோட்டக்காரன் மகளென்று சொல்லவே, அவன்: நீ மிகவும் சிறுபெண்ணாயும் அழகாயுமிருக்கிறாய். நாளைய தினம் நான் கொடுக்கிற பூமுதலியவைகளை என் அரண்மனையிலி ருக்கிற ஒரு சுந்தரிக்குக்கொண்டு கொடுக்கவாவென்றான். அதைக் கேட்கவே ராஜகுமாரன் மிகவும் சந்தோஷமடைந்து உடனே அந் தச் செய்தியைத் தோட்டக்காரியண்டைபோய்ச் சொன்னான். தான் மாறுவேஷம் பூண்டது தனக்கு மிகவும் ஆதாவாயிற்றென் றும், அந்த அரண்மனையிலிருப்பவள் தன் தாயாயிருப்பாளாயின் அவளைக் கண்டுபேசத் தருணம்வாய்த்ததென்றும் எண்ணியிருந் தான்.

இதிருக்க முன் சிங்காரத்திற்குக் கலியாணகாலத்தில் அவள் புருஷன் அவளுக்கு ஒரு சிறிய பொன்மோதிரங் கொடுத்திருந்

தான். அதில் அவள் பெயர் செதுக்கியிருந்தது; அம்மோதிரம் அவள் குழந்தையின் விரலுக்குச் சரியாயிருந்ததனால் அவன் விரலில் போட்டுவைத்தாள், அந்தச் சிறுவன் பெரியவனானபின்பு அவன் அத்தைமார்கள் அம்மோதிரத்தைக் கொஞ்சம் பெரிதாக்கி இட்டுவைத்தார்கள். அது இப்போதும் அவன் கையிலேயே இருந்தது. "அந்த அங்குலியகத்தை நீ கொண்டுபோகிற பூஞ் செண்டுகளுள் ஒன்றில் சுற்றி உன் தாய்கையிற் கொடுத்தால் அவளுக்கு நன்றாய் நம்பிக்கையுண்டாகும்" என்று அந்த வீட்டுக்காரி புத்திசொல்லியனுப்பினாள். ஆயினும் அது சுலபத்திற் செய்துமுடிக்கக்கூடாமற்போயிற்று. அந்தப் பெண்ணுக்கு வேண்டியவர்கள் யாராவது இந்த வேஷதாரிப்பெண் மூலமாய்ச் செய்திசொல்லியனுப்பப்போகிறார்களென்று எப்போதும் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். இவன் எப்போ தருணம் வாய்க்கப்போகிறதென்று எதிர்பார்த்திருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் இவன் இஷ்டம் கைகூடிற்று. ஒருவரும் பாராததருணம்பார்த்து அம்மோதிரத்தை ஒரு பூஞ்செண்டில் சுற்றி அவள் காலண்டை எறிந்தான். அது 'கணீல்' என்று ஓசைகேட்கவே, அதென்னென்று எடுத்துப்பார்த்தாள். அதற்குள் அந்த மோதிரம் இருந்தது; அதைக் காணவே தன் பிள்ளை முன்சொல்லியிருந்த செய்தியெல்லாம் உண்மையென்று நம்பி இப்போது நான் செய்யவேண்டுவதென்ன? நான் இவனைக் கலியாணஞ்செய்துகொள்ளமாட்டேனென்றதனால் பன்னிரண்டு வருஷமாய் என்னைக் கடுஞ்சிறைசெய்திருக்கிறான். ஆயினும் என்னைத் தப்புவிக்கவேண்டுமென்று உனக்கு அபாயகரமான காரியமொன்றையும் நீ தேடவேண்டாம்" என்றாள்.

அந்தக் குமாரன் மிகவும் புத்திசாலி; அவன் நன்றாய் ஆலோசித்து, என் அருமைத்தாயே! நீ பயப்படவேண்டாம்; என் தகப்பன்மார்கள் கற்களாக மாறியிருக்கிறார்களே, அவர்களை நாம் மீட்கவேண்டுமல்லவோ; அதற்காக முதலில் இவனுடைய வல்லமை எவ்வளவுதூரம் ஓடுகிறதோ ஆராய்ந்தறியவேண்டும். பன்னிரண்டுவருஷகாலமாய் ஒருநாளும் நீ இந்த மாயாவியோடு குளிர்ந்து பேசாமலிருந்ததனால் அவன் வழிக்கு வரவில்லை. இப்போ அவனுடன் கொஞ்சம் இனிப்பாய்ப் பேசு, "இத்தனைநாளாய் என் பர்த்தாவைப் பார்க்கலாமென்று எண்ணங்கொண்டிருந்தேன்; இனி அந்த ஆசையில்லை. இப்போ உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள விருப்பம் உண்டாயிருக்கிறது" என்று சொல்லி, பின்பு அவனுடைய சக்திக்கு இருப்பிடமெது? அவன் என்றும் அழிவில்லாதவனா? அல்லது அழியத்தக்கவனா என்று இவைகளையும் அறியமுயலவேண்டும் என்று சொன்னான். அந்த ஆலோசனையைக் கேட்டுச் சிங்காரம் மறுநாள் அந்த மந்திரவாதியை அழைப்பித்து முன் ஆலோசித்திருந்தபடியே செய்திசொன்னாள்.

அதைக்கேட்டு மாயாவாதி மகா சந்தோஷமாய்க் கூடிய சீக்கிரத்தில் விவாஹஞ்செய்துகொள்ளும்படி வேண்டினான். அதற்கு அவள்: கலியாணஞ்செய்துகொள்வதற்குமுன் எனக்குக் கொஞ்சம் அவகாசங்கொடுக்கவேண்டும். அதற்குள் உன்னோடு நன்றாய்ப் பழக்கஞ்செய்துகொள்ளுகிறேன். வெகுநாளாய் விரோதிகளாயிருந்தவர்களுக்கு நாளாவட்டத்திலேதான் சிநேகக்கட்டுப்பாடு உறுதிப்படும். இப்போ நான் சில சங்கதி கேட்கவேண்டியிருக்கிறது; நீ என்ன அமரனோ? சாவென்பது உன்னை அண்டாதோ? அல்லது பிராணிகளுக்குள்ள துன்பங்கள் உனக்குமுண்டோ?'' என்று கேட்டாள். அவன் அதை ஏன் நீ கேட்கிறாய் என்றதற்கு அவள்: ''நான் உனக்கு அகமுடையாளாகப்போவதனால் இச்செய்திகள் தெரிந்திருந்தால் உனக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தபோது கூடுமானால் அதைத் தடுக்கலாம்'' என்றாள். அதைக் கேட்டு அவன்: ''நான் மற்றவர்களைப்போலல்லவென்பது மெய்தான். ஏனென்றால் எனக்குச் சாவென்பது சமீபத்திலில்லை. இவ்விடத்திலிருந்து அநேகம் காததூரத்துக்கு அப்பால் நிர்மானுஷியமான வனாந்தரமொன்றுண்டு. அந்தப் பெருங்காட்டினடுவே வட்டமாய்ப் பனைமரங்களடர்ந்திருக்கின்றன. அந்தப் பனந்தோப்பின் நடுவே ஆறு சட்டிகள் ஒன்றின்மேலொன்றாய் நிரம்பத் தண்ணீரோடு அடுக்கியிருக்கின்றன. அவைகளுக்குக் கீழே சிறிய கூடு ஒன்று இருக்கின்றது. அந்தக் கூட்டில் சிறிய பச்சைக்கிளியொன்று உண்டு. அதனுயிர்தான் என்னுயிர்; அதைக் கொன்றுவிட்டால் நான் இறந்துபோகவேண்டுவதுதான். ஆயினும் அந்தக் கிளிக்குத் தீங்கு சம்பவிப்பதென்பது ஒருபோதும் நடவாதகாரியம். ஏனென்றால் முதலில் அவ்விடத்திற்கு மனிதர் போவதே அசாத்தியம். மேலும் நான் அங்கே அநேக பூதகணங்களைக் காவல்வைத்திருக்கிறேன். எப்படிப்பட்டவன் போனாலும் அவைகள் கொன்றுபோடும்'' என்றான்.

இச்செய்தியெல்லாம் சிங்காரம் உடனே தன் பிள்ளைக்குச் சொல்லிக் கடைசியில், அந்தக் கிளியை நாம் பிடிக்கலாமென்கிற ஆசையைவிட்டுவிடு என்றும் சொன்னாள். அதற்கு அந்தக் குமாரன், அம்மா! அந்தக் கிளியைப் பிடியாவிட்டால் உங்களையெல்லாம் விடுவிப்பதெப்படி? பயப்படாதே. துரிதமாய்த் திரும்பிவருகிறேன். நீமாத்திரம் இந்த மாயாவிக்குப் பற்பல சாக்குபோக்குகள் சொல்லி ஆசைகாட்டிக்கொண்டு இரு. கலியாணஞ்செய்துகொள்ளத் தாமதிப்பதற்குக் காரணமின்னதென்று அவன் தெரிந்துகொள்வதற்குமுன்னமே நான் இங்கேவந்து சேருவேனென்று சொல்லிப் போனான்.

அவன் வெகுதூரம் யாத்திரைசெய்தபிறகு ஒரு பெருங்காட்டண்டை போய் மிகவும் இளைப்படைந்து ஒரு மரத்தின்கீழே படுத்

துத் தூங்கிப்போனான். சலசலவென்று ஒரு சத்தங்கேட்க விழித்துக்கொண்டு சுற்றிப்பார்க்கையில், ஒரு பெரும்பாம்பு தான் படுத்திருக்கும் மரத்தின்மேலே கட்டியிருந்த ஒரு கழுகுக்கூட்டுக்காக ஏறிப்போயிற்று. அந்தக் கூட்டிலே இரண்டு கழுகுக்குஞ்சுகளிருந்தன. அவைகளுக்கு நேரிடப்போவதாயிருந்த அபாயத்தை ராஜகுமாரன் கண்டு தன் கத்தியையுருவி அந்தப் பாம்பைக் கொன்றான். அச்சமயத்தில் ஆகாசத்தில் ஒரு இரைச்சல் கேட்டது. அந்தக் குட்டிகளுக்காக இரை தேடப்போயிருந்த இரண்டு பெரிய கழுகுகள் வந்தன. அவை அங்கே செத்துக்கிடந்த பாம்பையும், அதன் சமீபத்திலிருந்த ராஜகுமாரனையும் பார்த்துச் சந்தோஷமடைந்தன. அவைகளுள் தாய்க் கழுகு அவனை நோக்கி: என் அருமைக் குழந்தாய்! இந்தக் கொடியபாம்பு அநேககாலமாய் எங்கள் குஞ்சுகளையெல்லாந் தின்றுகொண்டிருந்தன. இப்போது இந்தக் குஞ்சுகளை நீ பிழைப்பித்தாய். ஆதலால் உனக்கு எப்போ எந்தக் காரியமாகவேண்டியிருந்தாலும் எங்களுக்குச் சொல்லியனுப்பினால், உடனே வந்து ஒத்தாசைசெய்கிறோம். இந்தக் குஞ்சுகள் உன்னாலேயே பிழைத்தனவாகையால் அவைகளை நீயே உனக்குச் சேவகர்களாக வைத்துக்கொள் என்றது.

அதைக்கேட்கவே ராஜகுமாரன் பேரானந்தமடைந்து, அவைகளோடு தான் வந்தசெய்தியைச் சொன்னான். அந்தச் சிறிய கழுகுகள் அவன் கருத்தை நிறைவேற்றுவதற்காகத் தமது ரக்கைகளை விரிக்க அவன் அதன்மேலேறிக்கொண்டு அந்தக் காட்டிடையே வெகுதூரஞ்சென்று அங்கே வட்டமாய்ப் பனங்காடு ஒன்று இருப்பது கண்டு, அதின் நடுவேபோய்ப் பார்க்கையில் தண்ணீர் நிரப்பி ஆறு சட்டிகள் வைத்திருந்தன. அப்போ நல்ல நடுப்பகல்; தாபமோ அதியுக்கிரமாயிருந்தது. அந்தத் தோப்பைச்சுற்றிக் காவலாயிருந்த பூதகணங்களெல்லாம் அயர்ந்து தூங்கிப்போயிருந்தன. அங்கிருந்த பூதகணங்கள் இவ்வளவுவ்வளவென்று அளவுசங்கையில்லை; அளவற்றவைகள் அதைக் காத்துக்கொண்டிருந்தன. அவைகளைக் கடந்துபோக எவனாலுமாகாது. அவையெல்லாம் அயர்ந்திருக்கிற தருணம்பார்த்து ராஜகுமாரன் கீழேயிறங்கி அங்கிருந்த சட்டிகளை உதைத்துத் தள்ளி, அந்தக் கிளியைப்பிடித்துப் பையில்போட்டுக் கட்டிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிவிட்டான். பிறகு அந்தப் பூதங்கள் விழித்துக்கொண்டு தங்கள் நிதியைக்காணாமல் ஊளையிடத்தொடங்கின.

பின்பு அந்தச் சிறுகழுகுகள் முன் தாம்போனவழியே வெகுதூரம் பறந்துவந்து தாங்கள் இருந்த மரத்தண்டை கொண்டுசேர்த்தன. ராஜகுமாரன் அங்கிருந்த பெருங்கழுகுகளைக் கண்டு: “உங்கள் குஞ்சுகளை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இப்போ இவை எனக்குப் பேருதவிசெய்தன. எனக்கு எக்காலத்தில் ஒத்தாசைவேண்டு

மானாலும் இங்கே வருகிறேனென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு அந்த மந்திரவாதி இருக்குமிடம் வந்துசேர்ந்து அரண்மனை வாயிலண்டை அந்தக் கிளியைவைத்து விளையாடிக்கொண்டிருந்தான். மந்திரவாதி அதைக்கண்டு சீக்கிரமாய் அங்கேவந்து, "என் குழந்தாய்! இந்தக்கிளி உனக்கு எங்கே கிடைத்தது? இதை எனக்குக் கொடு" என்று வெகுநயமாய் வேண்டினான். அந்தக் குமாரன்: "ஓ! நான் மாட்டேன். என் கிளியை நான் ஒருவர்க்குங்கொடுப்பதில்லை; இது என் செல்வமாயிற்றே. இதை நான் வெகுநாளாய் வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்ல, மாயாவி: ஆம், அது மெய்தான், நெடுநாளாயாதரித்துவைத்திருக்கிற பொருளைக் கொடுத்துவிட யார்க்காகிலும் மனம்வருமா? அப்பா குழந்தாய்! இங்கேவா; அதை எவ்வளவுக்கு விற்பாய் என்று கேட்டான். குமாரன் அய்யா! நான் இதை ஒருபோதும் விற்கப்போகிறதில்லை என்றான்.

அதைக் கேட்டு மாயாவி பயந்து, அப்பா! உனக்கு எதுவேண்டுமானாலுங் கேள் கொடுக்கிறேன். அந்தக் கிளியைமாத்திரம் எனக்குக் கொடுவென்று வேண்ட, அந்தக் குமாரன்: நீ ஏழு ராஜகுமாரர்களைக் கல்லாகவும் மரமாகவும் செய்திருக்கிறையே; அவர்களை மீட்டுவிட்டால் தருவேனென்று சொல்லிமுடிவதற்கு முன்னமே, "இதோ ஆயிற்று அப்பனே" என்று தன் செங்கோலைத் தட்டினான். அவர்களுக்கு முன்னுருவம் வந்துவிட்டது. "மறுபடியும் அவன் என் கிளியைமாத்திரம் கொடுத்துவிடு" என்று வேண்டினான். அதற்கு அந்தச் சிறுவன்: "அவ்வளவு சுறுக்காய்க் கொடுத்துவிடுவேனோ? முதலில் நீ இங்கே சிறைசெய்திருக்கிற யாவரையும் பிழைப்பூட்டும்படி கேட்கவேண்டுவதல்லவோ எனக்குப் பெரியகாரியம்" என்றான். அதைக்கேட்டு மந்திரவாதி, "என் கிளியைக் கொடு" என்று தீனசுவரத்தோடு வேண்டினபடியே தன் கோலைச் சுழற்றினான். உடனே அங்கிருந்தவையெல்லாம் பிழைத்துப்போயின. கற்களும் பாறைகளும் மரங்களுமாயிருந்தவை எல்லாம் ராஜாக்களாகவும் பிரபுக்களாகவும் சர்தார்களாகவும் பலவித ஆடையாபரணங்களோடு அநேகம் பரிவாரங்கள் சூழப் பல வாஹனங்களின்மேல் நின்றபடியே எழுந்தார்கள்.

திரும்பவும், "மாயாவி என் கிளியைக் கொடுத்துவிடு குழந்தாய்!" என்று வேண்டினான். அப்போது அந்தச் சிறுவன் கிளியைக் கையில் பிடித்துக்கொண்டு அதின் ஒருபக்கத்துச் சிறகைப் பிச்செறிந்தான். மாயாவியின் வலதுகை கீழேவிழுந்துபோயிற்று; மாயாவி மறுபடியும் தன் இடதுகையை நீட்டி, "கிளியைக் கொடுவென்று புலம்பினான்; அவன் மற்றொரு சிறகையும் பிச்சுப்போட்டான். மாயாவியின் இடதுகையும் வீழ்ந்துபோயிற்று. மறுபடி முழங்காலிட்டுக் கிளியைக் கொடுக்கும்படி வேண்டினான். அந்தக் குமாரன் கிளி

யின் வலதுகாலைப் பிடிக்கினன். அவனுக்கு வலதுகால் போய்விட்டது. இடதுகாலைப் பிடுங்கவே அவனுக்கு அதுவும் போய்விட்டது.

இப்போது அவனுக்கு அவயவங்கள் ஒன்றுமில்லாத முண்டமும் தலையும்தவிர வேறொன்றுமில்லை. இன்னமும் அவன் தன் கண்களைச் சுழற்றிக் குறிப்புகாட்டிக் கிளியைக் கொடுக்கவேண்டினன். அதற்கு அந்த மகன், "உன் கிளியை நீ சுகமாய் எடுத்துக்கொள்" என்று சொல்லி அதின் கழுத்தைத் திரிகி அவன்மேல் எறிந்தான். அவனும் தலைதெறித்துவிழுந்து இறந்துபோனன்.

இப்போது உலகத்திற்கு என்ன சந்தோஷமுண்டாயிற்று பாருங்கள். அந்த ஏழுராஜாக்களும், அந்தக் குமாரனும் அரண்மனைக்குப்போய்ச் சிங்காரத்தை அழைத்துக்கொண்டு சுதேசம்போய்ச் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். மற்றவர்களும் ஆனந்தமடைந்தவர்களாய் அவரவர் தேசத்துக்குச் சென்றனர்.

சமாசாரம்.

மஹாராணியாருடைய விளம்பரம்.

மஹாராணியாரவர்கள் தமக்கு இந்துதேச அரசாட்சியில் உண்டாயிருக்கிற பிரியத்தையும், அத்தேசத்து அரசர்களும் குடிகளும் தம்முடைய அதிகாரத்துக்கு வணங்கி திருப்தியாய் நடந்துவருவதில் தமக்குத் தோன்றிய நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் தெரிவிக்கவேண்டுமென்கிற தயையோடு இத்தேசசம்பந்தமாய் ஒரு விசேஷபட்டம் தரித்துக்கொள்ளப் பிரியப்பட்டிருக்கிறார்களென்கிற சங்கதியைச் சகல ஜனங்களும் அறியும்படியாச் சென்ற ஏப்பிரல்மீ லண்டன்மாநகரில் பிரசுரஞ்செய்த விளம்பர பத்திரிகையை கவர்னர்ஜனரலாகிய லார்ட்டு லிட்டன் பிரபு அவர்கள் கெஜெட்டுப் பத்திரிகைகளில் பிரசித்தஞ்செய்வித்தபடி இதனடியில் ஒருவாறு மொழிபெயர்த்திருக்கிறோம்:—

நம்முடைய சீமை ராஜாங்கத்துக்கும், நமக்குள்ளடங்கிய வெளித்தேச ராஜாங்கத்துக்கும் பொருந்திய விசேஷப் பட்டப்பெயர் நாம் வகித்துக்கொள்ளலாமென்று இப்போது கூடியிருக்கிற பார்லிமெண்டு சபையார் தீர்மானித்து ஒரு சாஸனம் பிறப்பித்திருக்கிறார்கள். அன்றியும் இந்துதேசத்தைச் சீர்திருத்தி ஆளுதற்காக ஏற்படுத்திய சட்டத்திலும் முன்னமே நமக்குப் பிரதியாகக் கம்பினியார் ஆண்டுவந்த அத்தேசத்தின்

அரசாட்சியை நாமே வகித்துக்கொள்ளவேண்டுமென்றும், அதுமுதல் நாமே நமதுபேரால் அத்தேசத்தை அரசாளவேண்டுமென்றும், நாம் அந்த ராஜ்யபாரத்தை ஒப்புக்கொண்ட சங்கதி தெரியும்படியாக விசேஷ கௌரவமும் பட்டப்பெயரும் வகித்துக்கொள்வது யுக்தமென்றும் ஆஞ்ஞாபித்திருக்கின்றது. இதனால், இந்துராஜ்யத்தை ஒப்புக்கொண்டோமென்று தெரியும்படியாக நமக்கு யுக்தமாய்க் காணப்படும் விசேஷபட்டம் ஒன்று தரித்துக்கொள்வது நியாயமென்று தெரியவருகின்றது. ஆகையால் ஆலோசனைசபையாருடைய வேண்டுகோளின்படி இனி எக்காலத்திலும் நம்முடைய கௌரவத்தையும் பட்டப்பெயரையும் குறிக்கிற எல்லா சாஸனத்திலும் எல்லாவிஷயத்திலும் "இந்துதேச சக்கிரவர்த்தினி" என்கிற பட்டப்பெயரையும் நம்முடைய சீமை ராஜாங்கத்துக்கும் நமக்குள்ளடங்கிய வெளிராஜாங்கத்துக்கும் உரிய பட்டப்பெயரோடு சேர்த்து வழங்கிவரவேண்டுமென்று இதனால் சகலமானபேருக்கும் தெரிவிக்கிறோம்.

ஆயினும் நம்முடைய சீமை ராஜாங்கத்துக்கன்றி வெளியிலே பிரயோசனப்படாத அதிகாரபத்திரம் முதலான சாஸனங்களில் நாம் புதிதாக வகித்துக்கொண்ட பட்டப்பெயரைக் காணுவது நமக்குப் பிரியமில்லையென்று சகலரும் தெரிந்துகொள்ளவேண்டியது.

இப்போது சிமையில் வழங்கிவருகிற பொன் வெள்ளி தாமிரம் முதலான நாணயத்திலும் இனி நம்முடைய உத்தரவின்படி போடப்போகிற அதேமாதிரியான நாணயத்திலும் நாம் புதிதாய்த் தரித்துக்கொண்ட பட்டப்பெயர் கண்டிராவிடினும் அதை நம்முடைய ராஜ்யத்தின் நியாயமான நாணயமாகவே வழங்கிவரவேண்டியது. அன்றியும் நமக்குட்பட்ட வெளித்தேசத்தில் உபயோகமாகும்பொருட்டு நம்முடைய பட்டப்பெயரோடு போடப்பட்டு நம்முடைய ஆக்கினையால் அங்கங்கே செலாவணியாகி வருகிற நர்ணயத்திலும், இனிமேல் நம்முடைய உத்தரவால் போடப்போகிற நாணயத்திலும் நம்முடைய புதியபட்டம் குறிக்காவிடினும் அனத அவ்வவ்விடங்களில் வேறு உத்தரவுபிறக்குமட்டும் நியாயமான நாணயமாகவே வழங்கிவரவேண்டுமென்றும் இதனால் சகலமானபேருக்கும் அறிவிக்கிறோம்.

1876-ஆ௵ எப்பிரல்௴ 28௳ மகாராணியாரவர்களுடைய அரசாட்சியின் முப்பத்தொன்பதாம் ஆண்டு.

கடவுள் மகாராணியாரவர்களை
ரக்ஷிப்பாராக.

வருகிற 1877-ஆ௵ ஜனுவரி௴ 1௳யில் டில்லி முதலிய எல்லாநகரத்திலும் ராஜசபை கூடுங்காலத்தில் இதுதவிர வேறு விசேஷ விளம்பரம் படிக்கப்பட்டால், அதுவும் அக்காலத்தில் நடக்கும் சிறப்புகளும் வருகிற சஞ்சிகையில் விவரிக்கப்படும்.

Printed at the C. K. S. Press.